பல்சுவை
தமிழ்நெஞ்சம்
www.tamilnenjam.com ஜூலை 2019

மார்க்சியத் தமிழறிஞர்
கோவை ஞானியுடன் ...

சருகுகளின்
இருத்தல்கள்

ஆசிரியர்களில் நூலாசிரியர்
குறைந்து போனதே
தமிழ் வளர்ச்சிக்குத்
தடையானது!

உலகளவில்
ஞானச்செருக்கு

நன்மக்கள் உள்ளமெலாம் நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறிபால் எல்லோரும் ஒருங்கிணைந்து திரும்பட்டும்!

பல்சுவை

தமிழ்நெஞ்சம்®

தோற்றம் 1972 ஜூலை 2019

ஆசிரியர் / வெளியிடுபவர் :
அமின் மொஹமெட்
இணையாசிரியர் :
முனைவர் பெண்ணியம் செல்வக்குமாரி
நிர்வாக ஆசிரியர் :
சஃபி மொஹமெட்
ஆசிரியர் குழு :
ஹிப்ஸீர் ரஹ்மான்
நெல்லை உலகம்மாள்
கவிஞர் தென்றல் கவி
கவிஞர் அ.முத்துசாமி
கவிஞர் ஈழபாரதி
கவிஞர் பாலமுனை பாறூக்
ஆலோசகர்கள் :
பாட்டரசர் கி. பாரதிதாசன்
கவிதாயினி சக்தி ஜோதி

எழுத்தாளர்கள், நன்கொடையாளர்கள், புரவலர்கள் மற்றும் விமர்சனம், அறிமுகத்திற்கு நூல்கள் அனுப்ப அஞ்சல் தொடர்புகளுக்கு ...

TAMILNENJAM
59, rue des Entrechats, 95800 Cergy - France.

web : tamilnenjam.com
email : editor@tamilnenjam.com

புதிய ஆக்கங்களும், விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன. நூல் விமர்சனம் செய்திட, நூலின் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும். படைப்புகளுக்கு படைப்பாளிகளே பொறுப்பு. செவ்வைப் படுத்த ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு.

ஜனவரி 2020 ல் வெளியிடப்படவிருக்கும் “ஹைக்கூ - 2020” தொகுப்பு நூலுக்கு ஹைக்கூ கவிஞர்களிடமிருந்து கவிதைகளை எதிர் பார்க்கிறோம். விரைந்து சிறந்த 20 ஹைக்கூவுடன் ஒளிப்படம் சேர்த்து தாமதிக்காமல் உடனே அனுப்பும்படி கேட்டுக்கொள்கிறோம்.

editor@tamilnenjam.com

மார்க்சியத் தமிழறிஞர் கோவை ஞானியுடன் நான்!

முனைவர் நா. நளினி தேவி

கோவை ஞானி போன்றோர் வாழும் காலத்தில் நாமும் வாழ்கின்றோம் என்பதே பெருமையும் மகிழ்வும் தருகின்றது. ஆம்!, ஞானி, வேந்தவாம், பண்பாளர், அன்பாளர், நட்பாளர், நற்சிந்தனையாளர், தன்னம்பிக்கை நெஞ்சினர், மனித நேயர், இதழியலாளர் எனப் பன்முகச் சிறப்பினர்! எத்தகைய சிறியவரிடமும் தமக்குத் தெரியாத ஏதேனும் இருக்கும் எனக் கொண்டு அவர்களிடம் கற்றுக் கொள்ளத் தயங்காதவர்.

1982 ஆம் ஆண்டு இயற்கை இவருடைய கண்களைப் பறித்துக் கொண்டது! அதனால் மனமுடைந்து ஒதுங்கி விடாமல், பார்வை இல்லாதது நல்லதே எனக்கூறும் ஞானி எண்ணற்ற, பல்துறை நூல்களைப் படிக்கும் வாய்ப்புக் கிட்டியது என்று வியப்பில் ஆழ்த்துகிறார்.

மார்க்சியம், பெரியாரியம், தலித்தியம், தமிழ்த்தேசியம், பெண்ணியம், கவிதையியல், அரசியல் குறித்து ஆழ்ந்த சிந்தனையுடன் பெருநூல்கள் பல ஐம்பதுக்கும் மேல் எழுதி உள்ளார்! வானம்பாடி இயக்கத்தின் தூண்களுள் ஒருவரான இவர் “நிகழ்”, “பரிமாணம்”, “புதிய தலைமுறை”, “தமிழ் நேயம்” முதலிய சிற்றிதழ்களின் ஆசிரியர்; சிறந்த பேச்சாளர்.

இன்னும் எண்ணற்ற பல சிறப்புகளைக் கொண்ட இவரே கூறுவது போல் அவரது நெஞ்சுக்கு நெருக்கமானவர்களுள் நானும் ஒருவரானது எப்படி? நினைத்துப் பார்க்கின்றேன்!

2004 ஆம் ஆண்டு கல்லூரிப் பேராசிரியப் பணி நிறைவுற்றபின் எஞ்சிய நாட்களை எவ்வாறு கடத்துவது என்ற சிந்தனையில் சிக்குண்டிருந்தேன்! கற்பித்தலும், படிப்பதும், எழுதுவதுமே

என் பொழுது போக்கு! நூலகங்களுக்குச் சென்று புதுப்புது நூல்களைத் தேடிப் படிப்பதற்கு உடல் நலம் ஒத்துழைக்கவில்லை!

ஒருநாள் தமிழ் நேயம் இதழ் நடத்தும் மகளிருக்கான சிறுகதைப் போட்டி அறிவிப்பை நாளிதழ் ஒன்றில் கண்டு கதை ஒன்றை அனுப்பினேன்! அதற்குப் பரிசு கிடைத்தது.

நன்றி சொல்லி மடல் எழுத அப்படியே எங்களிடையே மடல் தொடர்பு ஏற்பட்டு இன்று வரை தொடர்கின்றது.

என் எழுத்தும், நடையும், கருத்தும் அவருக்கு ஏனோ பிடித்துப் போய்விட்டன. எனக்குள் இருந்த ஆய்வுத்தேடலை உணர்ந்த அவர் இடைவிடாத மடல்களாலும், அச்சு மணம்மாறாத புதிய புதிய பல துறை நூல்களாலும் செம்மை செய்து நெறிப்படுத்தினார். அவர் எழுத விரும்பிய நூல்களை என்னை எழுத வைத்தார். கால் ஆய்வு நூல்கள் புதிய பார்வையில் எழுதினேன்!

அவரை நேரில் பார்க்க விரும்பி என் தந்தையுடன் கோவை சென்றேன்! வாசலில் காத்திருந்து வரவேற்றார். வீடா? புத்தகக் காடா? என வியக்கும்படி எங்குப் பார்த்தாலும் புத்தகங்கள்! புத்தகங்கள்! தமிழக, இந்தியப் படைப்பாளர், வெளிநாடு வாழ் தமிழர்கள் அவரின் அணிந்துரை, கருத்துரைக்காகவும், அன்பளிப்பாகவும் அனுப்பியவையும் அவரே வாங்கிக் குவித்தவையும் அவை! அவருடைய இணையரின் விருந்தோம்பலுடன் அன்றைய நிகழ்வு முடிந்தது!

90 வயதிலிருந்த என் தந்தையை அவருடைய வாழ்க்கை வரலாற்றை எழுதுமாறு வலியுறுத்தினார்.

சில ஆண்டுகளுக்கு முன்பு அவருடைய இணையர் கடும் நோய்வாய்ப்பட்டு மறைந்த பின்னர் சூழ்ந்த வெறுமையையும், தனிமையையும் எதிர்கொண்டு தம் உதவியாளர் துணையுடன் படிப்பதைத் தொடர்ந்தார். உள்ளூரிலிருந்தும் வெளியூர்களிலிருந்தும் வந்த வண்ணமிருக்கும் நண்பர்களோடு எப்போதும் உரையாடல்!

இளவயதில் நக்சல்பாரியாகத் துடிப்புடன் இயங்கியவர் முதுமையாலும், மனக் கவலையாலும் வருத்தும் நோய்களாலும் நடைப்பயிற்சி, ஆய்வரங்கம், கருத்தரங்க நிகழ்வுகளில் கலந்து கொள்ள இயலாமற்போனது! எனினும் படிப்பதையும், இதழ்களுக்கு எழுதுவதையும் தொடர்ந்தார்! பல நாடுகளிலும் வாழும் தமிழ் அன்பர்கள், ஆய்வாளர்கள் அவரை வந்து பார்த்த வண்ணம் இருப்பார்கள்! நண்பர்களை எதற்காகவும் யாரிடமும் விட்டுக் கொடுக்க மாட்டார். இரண்டாவது முறையாகச் சந்தித்த போது அவருடைய இணையர் இல்லை! சென்னையில் அவர் மருத்துவ மனையிலிருந்த போதுகூட எனக்கு மடல் எழுதுவார்.

தொல்காப்பிய இலக்கிய மரபே இன்றுவரை தொடர்கின்றது என்பது அவர் கருத்து! இதனை அரண்செய்யும் வகையில் என்னை நூல் எழுதுமாறு அறிவுறுத்தினார். அவ்வாறே நானும் தொல்காப்பியம் முதல் இன்றைய புதுக் கவிதை வரை அதே மரபு தொடர்வதை "தமிழ் இலக்கியம் மரபும் புதுமையும்" எனும் நூல் எழுதினேன்! மிகவும் மகிழ்ந்தார்

இதுவரையிலான இலக்கிய வரலாற்று நூல்கள் நூல்களின் பட்டியல், ஆசிரியர் சிறப்பு என்றே உள்ளன.

எனவே இலக்கியங்களின் வரலாறும் இலக்கியங்களின் வழி வரலாறும் எழுதுவது தமிழின் தேவை என்று கூறி நான் அதை எழுத வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

இரண்டு ஆண்டுகள் முயன்று எழுதினேன்! ஒவ்வோர் இயலையும் படித்துத் திருத்தம், மாற்றம் செய்து உடனுக்கு உடனே தூதஞ்சலில் அனுப்பி விடுவார்.

"படைப்பிலக்கியப் பார்வையில் தமிழ் இலக்கியவரலாறு" எனும் இந்நூல் உடனடியாக

மொழி பெயர்க்கப்பட்டு மேலை அறிஞரிடம் கொண்டு செல்லப் படவேண்டும் எனப் பேராசிரியர். மருத நாயகம் அணிந்துரையில் குறிப்பிட்டுள்ளார்.

ஈழப் படைப்பாளர் எஸ்.பொன்னுத்துரை ஞானியின் உற்ற நண்பர். அவர் தன்னுடைய படைப்புகள் குறித்து எழுதுமாறு ஞானியைக் கேட்டுக்கொண்டார். தம்மால் எழுத இயலாத நிலையில் என்னைப் பரிந்துரைத்தார்! அவருடைய அனைத்துப் படைப்புகளையும் உள்ளடக்கி "இலக்கியப் போராளி எஸ். பொ.வின் படைப்பாளுமையும் பன்முகப் பார்வையும்'', எனும் திறனாய்வு நூல் மலரந்தது.

நூல் வரைவை. எஸ்.பொ. படித்தபோது என் கையெழுத்தை அவரால் படிக்க இயலவில்லை! ஈழப்போரின் தாக்கத்தால் உடல் நலம் குன்றிய எனக்கு இரண்டு அறுவைச் சிகிச்சைகள் செய்யப் பெற்றன! இதனால் மேசைமீது தாளை வைத்து எழுத முடியாமற்போய் வயிற்றின் மேல் அட்டையை வைத்து எழுதநேரிட்டதால் அழகான என் கையெழுத்து சிதைந்து விட்டது.

ஞானிக்கும் எஸ்.பொ.வுக்கும் நண்பரான சித்தன் நூல் சிறப்பாக இருப்பதால் தான் படி எடுத்துத் தருவதாக வாங்கிச் சென்றார். பல திங்களாகியும் தரவில்லை; ஆளையும் கண்டு பிடிக்க முடியவில்லை!

மனம் வருந்திய ஞானி பெரிதும் முயன்று சென்னையில் எஸ்.பொ.வின் நண்பர் இளம்பிறை ரஹ்மானிடம் நூலின் படி இருப்பதாக அறிந்து பெற்றுத் தந்தார். நூலை விரும்பிய எஸ்.பொ. தானே தன் செலவில் வெளியிடுவதாகச் சொல்லி இருந்தார். இந்தச் சிக்கலால் அது இயலவில்லை அவரும் மறைந்து விடவே நானே வெளியிட்டேன்! ஆஸ்திரேலியாவில் உள்ள அன்னாரின் இணையர் 20நூற் படிகள் வாங்கிச் சென்றார்!.

ஒரு நூலை முடிக்கும் நிலையில் அடுத்த நூலுக்கான நூலுக்கு அச்சாரம் இட்டு விடுவார். கட்டாயப் படுத்த மாட்டார். ஆனால் மறுக்க இயலாத வண்ணம் செய்யத் தூண்டுவது அவருடைய இயல்பான திறமை!

என்னுடைய வாழ்க்கைப் போராட்டம் தனி வகையிலானது. என்னைப் பற்றி முழுவதுமாக அறிந்தவர் ஆகையால் அதை வரலாற்றுப் புதினமாக எழுத வேண்டும் என ஓயாது அறிவுறுத்தினார்! பெண்ணியச் சிந்தனை என்னுள் பண்பட்ட முதிர்ச்சியை «நெஞ்சக் கதவை மெல்லத் திறந்து» எனும் ஒளிவு மறைவற்ற அந்நூல் கூறுவதை மனதாரப் பாராட்டினார்!

தமிழ் இலக்கியங்களைப் பற்றுக்கு அப்பால் வரலாற்று ஆய்வு நோக்குடன் படிப்பவர் ஞானி! புறநானூறுதான்

ஆசைகள்

"அவ்வப்போது மீறத் துடிக்கும் சிறு
ஆசைகள் ஒரு போதும் அடங்குவதேயில்லை,
ஆசைகளின் அளவை கடந்து விட்டேனென
அறிவு உரைக்கும் பொழுது மட்டுமே
அமைதியாயிருக்கிறது அது, ஆனால்
குட்டை போல் தேங்கிய நீரில்
குதித்து சிதறவிட்ட ஒரு மழைநாளில்
அறிவை மீறிய சிறு ஆசை
அதைப் பார்த்து ஏளனப் புன்னகைத்தது,
ஆசைகள் அறிவுக்குள் அடங்குவதேயில்லையோ?

காதலி...

காதலித்து
கொண்டேயிருக்கவேண்டும்
அவ(னை)ளை
ஆசை தீரும்வரை அல்ல...
கூடல் கலைந்த பின்னும்
ஊடல்கள் தீர்ந்த பின்னும்
காதலித்து கொண்டே
இருக்க வேண்டும்!

ச.இராஜ்குமார்
திருப்பத்தூர்

தமிழரின் பேரிலக்கியமாகும்! தமிழுக்குப் பேரிலக்கியமாகக் கம்ப ராமாயணம் இருந்து விட்டுப் போகட்டும் என்பது அவரது கருத்து! இதனை வலுவாக என்னால் நிறுவ முடியும் என்பது அவர் நம்பிக்கை! அவரது இந்த நம்பிக்கையை என்னால் இயன்றவரை "புறநானூறு-தமிழரின் பேரிலக்கியம்" எனும் நூலில் நிறைவேற்றி உள்ளேன்.

ஈராயிரமாண்டுக் கவிதைகள் குறித்து அவர் எழுதி உள்ள 800 பக்க அளவிலான கவிதையியல் ஆய்வு நூலை அடிப்படையாக வைத்து ''ஞானியின் கவிதை இயல் கொள்கைகள்'' நூலை எழுதினேன். அவர், 15 ஆண்டுகளாக அவர் எனக்கு எழுதிய பல துறைக் கருத்துகளைச் சுருக்கி மறைந்து விட்ட மடல் எழுதும் கலையின் சிறப்பை நினைவு கூறும் வண்ணம் "நட்பிற் பெருந்தக்க யாவுள'', எனும் நூலாக்கி மகிழ்ந்தேன் !

பின்னர் தமிழ் இலக்கிய வரலாற்றை இளந் தலைமுறை சுருக்கமாக அறிந்து கொள்ளும் வகையில் உரைக் கவிதையாக்க வேண்டும் என அவர் விரும்பிய வண்ணம் எழுதி அச்சாக்கத்தில் உள்ளது! (நடந்தாய் வாழி தமிழே)

பழந் தமிழ் இலக்கியங்களை அவற்றின் ஆழ அகலத்துடன் கற்றுணர்ந்த போதும் புத்திலக்கியங்களையும் வெகுவாக வர வேற்பவர்! நூற்றுக் கணக்கான கவிதைகள் எழுதி உள்ள அவர் பார்வை இழப்புக்குப்பின் கவிதை எழுதி விட்டதாகச் சொல்லும்போது நம் மனம் வலிக்கின்றது.

சில கவிதைகளைத் தொகுத்து அதற்கு அணிந்துரை வழங்குமாறு கேட்டுக் கொண்ட அவரது பெருந்தன்மை போற்றுதற்குரிய ஒன்று. அந்நூலைப் புதுப்புனல் வெளியிட்டுள்ளது!

தமிழ் பக்தியின் மொழி எனக் கூறப்படுகிறது. ஞானி இதை மறுத்துத் தமிழ் கவிதையின் மொழியே என்பார். தனது இந்தக் கருத்தை அரண் செய்து எழுதுமாறு கூறி உள்ளார். எழுதிக் கொண்டிருக்கின்றேன் !

சங்க இலக்கியம் பற்றிய அறிமுகம் காலத்தின் கட்டாயத்தேவை என்பது உணர்ந்து தம் மகன் மூலம் பதிப்பிக்க வேண்டும் என்கிறார்! அதை நான் எழுத வேண்டும் என்பது அவரது மனமார்ந்த விருப்பம்! அது தொடங்கிய நிலையில் உள்ளது. விரைந்து முடித்து அவர். கைகளில் தர வேண்டும்!

தனி மனித வரலாறே சமுதாய வரலாறு .ஆகையால் என் தந்தை ஞானி கேட்டுக் கொண்ட வண்ணம் எழுதத்தொடங்கிய நிலையில் (2017) மறைந்து விட்டார்! அவர் தொடங்கி உள்ளதை நான் சுருக்கமாக முடித்துள்ளேன்.

ஞானியின் வரலாற்றை எழுத நான் அனுமதி கேட்ட போது தன்னைப் பற்றி எழுத ஒன்றும் இல்லை என்று மறுத்து விட்டார்! பல அறிஞர்களின் நூல்கள், ஆய்வுகள் விருதுகள், பட்டங்கள் அவருடைய வாழ் நாள் அருஞ் செயல்களை ஆவணங்களாக்கி உள்ளேன்

என் தமிழ்ப் பணிகளை "நானும் என்

தமிழும்" எனும் தலைப்பில் தமிழ் நேயம் முதல் இதழாக்கித் தொடர்ந்து பல அறிஞர்களை எழுத வைத்தார்! சில காரணங்களால் அவ்விதழைப் பெரு வருத்தத்துடன் நிறுத்த நேர்ந்தது.

பலருக்கும் அறிமுகப்படுத்திப் புதிய புதிய நூல்கள் அனுப்பி ஆய்வுரை, கருத்துரைகள் எழுத வைப்பதே அவருடைய நட்பின் சிறப்பு! எனினும் என் அளவிலான இந்த அரிய நூல்கள் உரிய வகையில் அறிமுகமாகவில்லை என்பது அவரது வருத்தம்

ஆயிரக்கணக்கான நூல்கள், கவிதைகள், ஆய்வுக் கட்டுரைகள், கருத்துப் பிழிவுகள், சொற் பெருக்குகள், நண்பர்கள், மாணவர்கள் என அறிவும் அன்பும் நிறைந்த வாழ்வினர்! உடற் குறையுடன் இவர் போல் வாழ்வாங்கு வாழும் அறிஞர் இனி அரிது! எல்லா இதழ்களிலும் என்னை எழுத வைத்த பேரன்பினர்.!

என் ஆய்வுப் பார்வையை ஆழமாக்கி அகலப்படுத்தியவர்.

இப்போது எல்லாம் துறந்து எதுவும் இயலாமல் தான் பல்லாண்டுக் காலம் பற்றுடன் கற்றுத்துய்த்த தமிழ் மெய்யியலுக்கு எடுத்துக்காட்டாகப் பல நலிவுகளுடன் நாட்களைக் கடத்திக் கொண்டுள்ளார். தந்தை, ஆசிரியர், தோழர் என்ற உறவுகளுக்கு அப்பாற்பட்ட உறவுடையர்.

தான் நிறுத்த நேர்ந்த எனக்கான நூலாக்கத் துணையை வ.ஆரூர் தமிழ் நாடனிடம் மடை மாற்றி உள்ளார்! ஒரு கதவு அடைக்க நேர்ந்தால் மற்றொரு கதவு திறக்கும் தானே?

விரைவில் மீண்டு தமிழ்த் தேசியம் மலரக் காண்பார்!

ஆம்! அதுவே அவரது மூச்சு! வாழ்த்துவோம் வாருங்கள்!

அவர் வாழ்வு தமிழின் வாழ்வே! ■

அணையா விளக்கு

உள்ளத்து அகலில்
உணர்வுத்திரி முறுக்கி
பார்வைப் பொறியில்
பற்றவைத்த விளக்கு.

இருளில் தவித்து
இரைந்து கிடந்தவனை
பொறுக்கிச் சேர்த்த
பொன்னொளி அது.

வாழ்வின் விடியலை
வழங்கிய தீபம் - நீ
வந்து சேர்ந்ததும்
வரமானது சாபம்.

உன்னொளி கொண்டே
உயிர் கொடுத்தாய்
உறங்கிக் கொண்டிருந்த
உறவுச்சர விளக்குகளுக்கும்.

ஒவ்வொரு நிகழ்வையும்
உள்ளாய்ந்து சோதி
அத்தனையிலும் ஒளிரும்
அன்பேவுன் சோதி.

ஓயாமல் ஒளிரும்
உள்ளத்து விளக்கே
உண்மையில் எந்தன்
கலங்கரை விளக்கே!

நெருங்கி வந்த
நெருப்பின் துகளே
நிறைவாய் எரியும்
நெஞ்சத்து அகலே!

கண்ணில் மின்னிய
கடவுளின் அருளே
நீயில்லா வாழ்வு
நிச்சயம் இருளே!

- கலாநேசன் சரவணன்
ஹைதராபாத்

நற்றமிழ் காக்க தமிழ்நெஞ்சம் வாழியவே

இந்நாள் (26 ஜூன்)
இனிய நன்னாள்
பொன்னாள்
தமிழ் நெஞ்சமாய்
வந்தது உலா
அனைவரின் உள்ளத்தில்
இதோ இத்தென்றலின்
இனிய உறவென
கவியுலகப்
பூஞ்சோலையில்
முகிழ்த்தது
மலர்ந்தது மணம் வீசிக்கொண்டு
இருக்கின்றது
வலம் வருகின்றது
தமிழ்நெஞ்சம்
ஆசிரியக்குழுவில்
இணைத்தது
அழகு பார்த்தது
தென்றலின் தேடல்கள்
தென்றமிழாய் இனித்திட
வகை செய்தது
முற்பிறவிப்பயன் இத்தெளிந்த
நீரோடையென
அலை வீசும் இந்நட்பு
இது என்றும்
தொடரட்டும்
தொடர்ந்திடும்
நல்வாழ்த்துகள்
நலமுடன் மொழிந்தேன்
வாழிய தமிழ்நெஞ்சம் பல்லாண்டு..
நற்றமிழ் காக்கவே...
வாழிய வாழியவே...

தென்றல் கவி

தமிழ்நெஞ்சம் அமின் என்றால் எல்லோரும் தடையின்றி அறிவர்

அலைபோல ஓய்வின்றித் தமிழ்ப்பணியை
ஆற்றுகின்ற தூய நெஞ்சர்
சிலைபோல நின்றிடாமல் சிந்தித்துச்
செந்தமிழைப் போற்று கின்ற
நிலைமாந்தர் அமின்தோழர் என்றறிந்து
நற்றமிழால் வாழ்த்து கின்றேன்
விலையில்லா தமிழ்நெஞ்சால் வாழ்கவென
வாழ்த்துகின்றேன் வாழ்க! வாழ்க!!

கதிர்முன்னர் தானெழுந்து கண்ணிமையாய்
கனிதமிழைக் காத்து வாழும்
புதிர்மாந்தர் அமின்நண்பர் எந்தநாளும்
பூப்போல மணம்ப ரப்பி
மதியோடு இவ்வுலகை சுற்றிவரும்
மாண்பாளர் அன்பு நெஞ்சர்
எதிரிகளே இல்லாமல் இயங்குகின்ற
எம்தோழர் வாழ்க! வாழ்க!!

தமிழ்நெஞ்சம் அமின்என்றால் எல்லோரும்
தடையின்றி அறிவார் இங்கே
தமிழ்த்தொண்டன் அமினுள்ளம் தூயதாகும்
தணல்போல மாசு இன்றி
அமிழ்தப்பணி ஆற்றுகின்றார் ஆற்றலோடு
அடிச்சுவட்டைப் பின்தொ டர்ந்து
விழுதாக வரலாறு படைக்கின்றார்
வீறுடனே எந்த நாளும்.

புதுவைத் தமிழ்நெஞ்சன்

வடிவமைத்து, அழகுரைத்து, செயலாற்றும் அழகர் வாழ்க!

கடல்கடந்து நிலைஉயர்ந்து
கற்பனையில் தனைமறந்து
மடல்திறந்து எழுதுகின்ற நெஞ்சமே - கவி
மடிசுமந்து மணம்பரப்ப அஞ்சுமே !

பதம்பார்த்து நிதம்கோர்த்து
பைந்தமிழின் கரம்சேர்த்து
சதமடிக்க அடம்பிடிக்கும் அமினே - உமது
சாதனைகள் பழமையிலை நவீனே !

கவிமனத்தின் புதுமணத்தைக்
கணினியிலே அச்சேற்றி
நவரசமாய் வழங்குகின்ற கவிஞரே - தமிழ்
நாளுமுமை வாழ்த்திடுமே புவியிலே !

புதுமையைப் பழமையைப்
புரையோடிய புன்மையைப்
பலவிதழில் காட்டிவிட்ட அறிஞரே - புவி
பார்த்துமனம் ரசிக்கின்ற பொறிஞரே !

வெளியுலகு தருமழகை
வெளிச்சமிட்டு வழங்கிதினம்
அழகாகக் காட்டுகின்ற தமிழரே - கவிஞர்
அதனழகில் மனங்களிக்க விழைவரே !

படியெடுத்து வடிவமைத்து
பக்கமெல்லாம் அழகுரைத்து
துடிப்போடு செயலாற்றும் அழகரே - உம்
துணையோடு கவியுலகம் வெல்கவே !

கவிஞர்.அ.முத்துசாமி
தாரமங்கலம் .

உன் தமிழ்ப் பணி போல உயரம்
வானுக்குமில்லை!
உன் கலைச் செல்வம் போல
பெறுமதி வைரத்திற்கும் இல்லை!
வாழ்க வளமாய்...

- ராஜகவி ராகில்

சுத்தத் தமிழன் சுந்தரவான் வாழ்கவே

எட்ரைக்கோடி தமிழ் நெஞ்சம்
இவனெட்டா உயரம் மிகக் கொஞ்சம்
கட்டழகான இளஞ்சிங்கம்
கருணையிவனின் மலர் மஞ்சம்
பட்டு பகட்டு காட்டாதான்;மனப்
பங்கில் சுயநலம் கூட்டாதான்
எட்டுதிசையதும் எதிரொலிக்கும்
இலக்கிய ஆளுமை வலை விரிக்கும்!

சுத்தத் தமிழன் சுந்தரவான்;தமிழ்
சூரிய வானுக்கு இந்திர கோன்
பத்தரை மாற்று பசும் பொன்னே
படைப்பதில் பலரும் இவன் பின்னே
இத்தரை பாடிய தாலாட்டு;இன்றே
இவன் முதல் நீராட்டு;நாம்
மெத்த புகழ் சொலி பாராட்டி
மேலும் வளர்ந்திட வாழ்த்துவமே!

பொன்மணிதாசன்

ஆசிரியர்களில் நூலாசிரியர் குறைந்து போனதே தமிழ் வளர்ச்சிக்குத் தடையானது!

கவிஞர் நா.முத்துநிலவன் பேச்சு

புதுக்கோட்டையருகில் மதுரைச் சாலையில் உள்ள ரோட்டரி மகாலில் நடந்த புத்தக வெளியீட்டு விழாவில் பேசிய கவிஞர் நா.முத்துநிலவன், "தமிழ்நாட்டு ஆசிரியர்களில் சொந்தமாக சிந்தித்து நூல் எழுதுவோர் குறைந்து போனதே தமிழ்வளர்ச்சிக்குத் தடையானது" என்றார்.

புதுக்கோட்டை ரோட்டரி சங்கம் சமீபத்தில் நடத்திய விழாவுக்கு ரோட்டரித் தலைவர் கே.திருப்பதி தலைமை தாங்கினார். செயலாளர் ஆர்.ஜெயக்குமார் வரவேற்றார்.

மேலைச்சிவபுரி கணேசர் கலை அறிவியல் கல்லூரியின் முன்னாள் உடற்கல்வி இயக்குநர் முனைவர் நா.விஜயரெகுநாதனும், இராணியார் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியின் உடற்கல்வி இயக்குநர் வி.ராஜசரோவும் இணைந்து எழுதிய "யோகாவும் உடல்நலமும்" எனும் நூலை எழுத்தாளரும் பட்டிமன்றப் பேச்சாளருமான கவிஞர் நா.முத்துநிலவன் வெளியிட்டார். முன்னாள் முதல்வரும் தமிழ்ப் பேராசிரியருமான முனைவர் தா.மணி முதல் பிரதியை பெற்றுக்கொண்டு நூலாசிரியரை வாழ்த்தி உரையாற்றினார்.

ஆயுள் காப்பீட்டுக் கழக வளர்ச்சி அதிகாரி நா.விஜயகுமார், ஆனந்த யோகா பவுண்டேசன் யோகா செல்வராஜ், மூத்த ரொட்டேரியன் திருப்பதி, பிஎஸ்கே பள்ளித் தாளாளர் பி.கருப்பையா ஆகியோர் நூலின் சிறப்புகளைக் குறித்து, பல்வேறு கோணங்களில் எடுத்து உரையாற்றினர்.

நூலை வெளியிட்டு சிறப்புரையாற்றிய நா.முத்துநிலவன் பேசும்போது-

"யோகா ஆசிரியர் ஒருவர், தனது பாடத்தில் முனைவர் பட்டம் பெற்றது, அவரது வழிகாட்டுதலில் பன்னிரண்டுபேர் முனைவர் பட்டம் பெற உதவியது, மட்டுமின்றி, ஏற்கெனவே தான் சார்ந்துள்ள உடற்கல்வித் துறையில் நான்கு நூல்களை வெளியிட்டு, தற்போது ஐந்தாவது நூலை எழுதி வெளியிடுவது உண்மையிலேயே பாராட்டுக்கு உரியது.

தமிழ், உலகப் புகழ்பெற்ற செம்மொழிகளில் இன்றும் தொடர்ச்சியான பயன்பாட்டுக்கு உரிய ஒரே மொழி எனும் பெருமை பெற்றதுதான் என்றாலும், தற்போது, சில நூற்றாண்டுகளாக தமிழ் வளர்ச்சியில் பின்னடைவு ஏற்பட முக்கியக் காரணம், பலதுறைகளில் படித்துப் பட்டம் பெற்றுப் பணியாற்றும் தமிழர் பலரும் – முக்கியமாக ஆசிரியர்கள் - தம் துறையில் தாம்பெற்றிருக்கும் அறிவை, அடுத்த தலைமுறைகளுக்கு வழங்கும் ஆர்வத்துடன் நூல்களை எழுதாமல், தமிழ்சார்ந்த பல்துறை வளர்ச்சிக்கு உதவாமல் போனதுதான்.

வெறும் பழம்பெருமை பேசுவதால் யாதொரு பலனும் இல்லை! இன்று உள்ள இந்திய அளவிலான உயர் இலக்கிய விருதான "ஞானபீடம்" விருதினை நம் அருகிலுள்ள கன்னடமொழியில்எட்டுமுறையும், மலையாள மொழியில் ஐந்து முறையும், தெலுங்கில் கூட மும்முறையும் பெற்றிருக்கிறார்கள். ஆனால், இவர்களுக்கெல்லாம் மூத்த மொழியான தமிழ்மொழிக்கு ஞானபீட விருது இரண்டே முறைதான் கிடைத்திருக்கிறது! அதிலுள்ள அரசியலைத் தாண்டி ஆழ்ந்து யோசித்தால் இந்த அவலத்துக்கான காரணம் புரியும்.

பக்கத்திலுள்ள பெரியகோவிலை ஒரு தமிழ்மன்னன் கட்டியபோது, இங்கு ஆங்கில மொழியே வரவில்லை! பதினேழாம் நூற்றாண்டைச் சேர்ந்த கலிலியோவிற்குப் பிறகுதான் உலகம் வானியலை அறிவியல் வழியில் புரிந்துகொண்டது. ஆனால் ஈராயிரம் ஆண்டுகளாக நம் புழக்கத்திலுள்ள திங்கள், செவ்வாய், வெள்ளி, சனி, ஞாயிறு எனும் தனித்தமிழ்ச் சொற்களே பழந்தமிழர்களின் அறிவியல் அறிவைப் பறை சாற்றுகின்றன! இன்றுள்ள அறிவியலைப் படித்த தமிழர்கள் நமது பழந்தமிழ் அறிவியலைப் பற்றி ஏன் எழுதவில்லை? பெரியகோவிலைப் பார்த்தும் ஒரு தமிழ்ப்பொறியியலாளர் ஏன் அதுபற்றிய பொறியியல் நூலைத் தமிழில் எழுதவில்லை? இதுபோல் பலதுறை அறிவைப் பெற்றிருக்கும் தமிழர்கள், அதுபற்றி அடுத்த நம் தலைமுறைக்குப் பயன்படுவதுபோல நூல்கள் எழுதாதது பெரிய இழப்பாகும். வெகு சிலரே இவ்வகையில் நூல் எழுதிப் பெருமை சேர்த்திருக்கிறார்கள்.

அதிலும் ஆசிரியர்கள் படைப்பாளர்களாகவும் இருக்கவேண்டும். எந்தப் பாடமானாலும் கலைப்படைப்பாக அதனை மாணவர்க்குத் தரும் ஆசிரியரே மாணவர் மனம்கவர்ந்து தமது கற்பித்தலில் வெற்றிபெற முடியும்! பாடங்கள் தாண்டியும் படைப்பிலக்கிய உணர்வோடு நூல்கள் கொண்டுவரும் ஆசிரியர் பாட ஆசிரியராக மட்டுமல்லாமல்,அடுத்ததலைமுறைக்குமான சமூகத்தின் ஆசிரியர் எனும் பெருமையைப் பெறுகிறார். அது மிகவும் போற்றுதற்குரியது.

இவ்வகையில் தனது துறைசார்ந்த அறிவை எளிய முறையில் விளக்கி, எல்லார்க்கும் பயன்படத்தக்க நூலாக்கித் தந்திருக்கும் முனைவர் நா. விஜய ரகுநாதன் மிகுந்த பாராட்டிற்குரியவர். அதோடு, யோகா என்பது ஏதோ ஒரேஒரு மதத்திற்கு மட்டுமேசொந்தமானகலைஎன்பதுபோன்ற தோற்றம் நம் நாட்டில் கட்டப்பட்டுள்ளது. அதை மீறி, இந்நூலாசிரியர் பௌத்த மதம், சமண மதம் சார்ந்த அறிஞர்களும் திருமூலர் போலும் சித்தர்களும் எப்படி யோகாவை வளர்த்துள்ளனர் என்பதை நூலில் விளக்கியிருப்பது சிறப்பானது.

மேற்கண்டவாறு எழுத்தாளர் நா.முத்துநிலவன் சிறப்புரையாற்றினார்.

நிகழ்ச்சியில் ரோட்டரி முன்னோடிகள் கதிரேசன்,ஆர்ஏவிகுமாரசாமி,ராதாகிருஷ்ணன், பத்திரிகையாளர் சிவசக்திவேல், பேராசிரியர் கிருஷ்ண மூர்த்தி, எல்ஐசி இளவழகன், உடற் கல்வி இயக்குநர்கள் செல்வராஜ், ஜான்பார்த்திபன், ராஜேந்திரன், தொழிலதிபர் பழனிராஜன், டாக்டர் ஸ்ரீராம், அலுவலர் மன்றத்தைச் சேர்ந்த கோபி, பொறியாளர் முத்துக்கருப்பன்,அக்ரிராமமூர்த்தி,ஞானாலயா ஆய்வு நூலக அலுவலர் செல்வராஜ், ஜேசி பயிற்றுநர் கவிஞர் இளங்கோ உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். நிறைவாக நூலாசிரியர் முனைவர் நா.விஜயரகுநாதன் நூலாக்கத்தில் உதவியோர்க்கும், விழாவில் கலந்துகொண்ட அனைவர்க்கும் நன்றி தெரிவித்து ஏற்புரையாற்றினார். ■

ஆன்மீகம் தழைக்க...

ஆன்மீகம் ஆன்மீகம் என்றெல்லாம்
பெருமுழக்கம் கேட்டாலும்...
ஆன்மீகம் என்பதற்கு
அர்த்தம்தான் புரிவதில்லை.

பூதலத்தில் பல மனிதர்
பல இனங்களென்றும்
மதங்களென்றும்
பறைசாற்றித் திரிகையிலும்
ஆன்மீகப் போர்வையிலே
பிரச்சாரம் பிரச்சாரம்
எங்கெங்கும் பிரச்சாரம்.

எனது மதம் எனது மதம்
எனது இனம் எனது இனம்
இப்படித்தான் முழக்குகின்றார்
மனிதரிலே மனிதம் எங்கே?

ஆன்மீகப் போதனைகள்
மனிதத்தை விரண்டோட
விரைந்து வெருட்டுகையில்
ஆன்மீகம் தழைப்பதெங்கே..?

எங்கெங்கும் துவேசங்கள்
இனத் துவேசம், மதத் துவேசம்
நான் பெரிதா? நீ பெரிதா?
என்ற அர்த்தமற்ற போராட்டங்கள்
தொடரும் போராட்டங்கள்- இவை
விதைக்கும் விஷ வித்துக்கள்
மனிதரிலே மனிதத்தை
கொன்று குவிக்கின்றன.

ஆன்மீகப் போதனைகளின்
ஆழக்கருத்துக்கள்
ஆய்ந்து பார்க்கையில் அத்தனையும்...
குத்தல்களும் குதர்க்கங்களும்.

ஆன்மீகம் தழைத்தோங்க
ஆழ்ந்து சிந்தித்தால்
மனிதன் மனிதத்துடன் வாழ்ந்து விட
ஆன்மீகம் தழைத்தோங்கும்.

அடுத்தவரை ஏய்க்காமல்
அன்பும் அகிம்சையும்
இரக்கமும் ஈகையும்
உவப்புடனே மக்கள் வாழ்க்கை
உயர்வதற்கு உழைப்போமானால்
ஆன்மீகம் தழைத்தோங்கும் - இதில்
ஐயமில்லை ஐயமில்லை.

நஸீரா எஸ். ஆப்தீன்

உலகளவில் ஞானச்செருக்கு

இயக்குநர் தரணி ராசேந்திரனுடன் நேர்காணல்

சந்திப்பு: மகிழ்ச்சி ஆ.ராம்குமார்

எனக்கு சொந்த ஊர் திருவாரூர். படிச்சது, இருக்குறது எல்லா சென்னைதா. பத்தாம் வகுப்பு வரை விவேகானந்தர் பள்ளியில் ஆங்கில வழி கல்வி தா படிச்ச. குடும்ப சூழல் காரணமா பதினொன்று, பன்னிரண்டாம் வகுப்பு வரை தமிழ் வழி பள்ளியில் படிச்ச. அப்போ எல்லோரும் சொல்ற மாதிரி இன்ஜினியரிங் தா பெரிய படிப்புனு சொன்னதனால.நானும் வேற வழி இல்லாம இன்ஜினியரிங்ல எலக்ட்ரிக்கல் இன்ஜினியரிங் சேர்ந்து நல்ல படியா முடிச்சாச்சு. 2012ல் இன்ஜினியரிங் முடிச்ச. ஆனா எனக்கு சினிமா மேல தா பெரிய ஈர்ப்பு. அதுவும் இன்ஜினியரிங் முடிச்சுட்டு வேலைக் கிடைக்காதவங்க இன்ஜினியரிங்க காலேஜ்க்கு வேலைக்கு வந்துடுராங்க.

எனக்கு ஒன்னு புரிஞ்சுது. இந்த படிப்ப வச்சு ஒன்னு பன்னமுடியாதுனு. இரண்டாம் வருடம் மூன்றாம் வருடம் படிக்கும் போதெல்லாம் நா முடிவு பன்னிட்ட நமக்கு சினிமா ஏற்ற துறைனு. காலேஜ் கட் அடிச்சுட்டு சத்யம் தியேட்டர்ல படம் பார்க்க போனோம்.

இன்ஜினியரிங் முடிச்சது. கேம்பஸ் இன்டர்வீவ்லயும் செலெக்ட் ஆன. இருந்தாலும் எனக்கு சினிமா முக்கியம்னு தோனுச்சு. பிறகு அம்மா தா சொன்னாங்க

உனக்கு என்ன தோனுதோ அத செய்னு சொன்னாங்க.

அதனாலசினிமாசம்மந்தமாபடிக்கலாம்னு தோனுச்சு. 2012 ல் கொட்டிவாக்கம் சினிமா கல்லூரியில் ஒளிப்பதிவு சம்மந்தமா படிச்ச. ஆனா எனக்கு இயக்கம் தா விருப்பம். இருந்தாலும் தொழில்நுட்பம் குறித்து படிக்கனும்னு ஆச. அதனால ஒளிப்பதிவு படிச்ச.

அதுக்கப்புறம் குறும்படங்கள் எடுக்க ஆரம்பிச்சோம். கிட்டதட்ட பதினான்கு குறும்படங்கள் எடுத்தோம். எனக்கு மிகவும் பெரிய பக்க பலமாக இருந்தது என் மாமாவும், என் நண்பர் மகேந்திரனும். ஞானச்செருக்கு எப்படி உருவாச்சு?

நான் தனியாக யாரிடமும் உதவி இயக்குநராக இருந்து இல்ல. அதோடு நான் நிறைய பேரிடம் முயற்சி செய்தும் எதுவும் நடக்கல. என்னை எல்லோரும் அவங்க அவங்க தேவைக்காக பயன் படுத்திக்கிட்டாங்க.

இதற்கிடையில்தான்அய்யாவீரசந்தானம் அவர்களின் அறிமுகம் கிடைச்சது. அவர்கிட்ட நான் எடுத்த குறும்படத்தை எல்லாம் காட்டினேன். அவருக்கு எதுவும் பிடிக்கல. அதுக்கப்புறம் அவர் அவருக்கு தெரிந்த ஒருவரிடம் அறிமுகம் செய்து வைத்தார். அவருடன் சேர்ந்து நாங்கள் எடுத்த படங்களை திறனாய்வு செய்தோம். அப்போ அய்யா வீரசந்தானம் அவர்கள் சொன்ன வார்த்தைதான் எங்களுக்கு பெரிய மாற்றத்தை ஏற்படுத்திச்சு.

நாம் எடுக்குற எந்த ஒரு படைப்பும் மண் சார்ந்தும் பண்பாடு சார்ந்தும் இருக்க வேண்டியது மிக முக்கியமான ஒன்று என்றும், அது தான் மக்களிடையே மாற்றத்தை ஏற்படுத்தும் என்றும் சொன்னார். அதோடு இந்த விஞ்ஞானமும், வளர்ச்சியும் மக்களிடத்தில் எந்தொரு மாற்றத்தையும் ஏற்படுத்தாது என்றும் கூறினார். அதன் பிறகுதான் இந்த கதையை உருவாக்கினோம். இந்த கதையை நாங்கள் வளர்க்கவே இல்லை. அது தன்னை தானே வளர்த்தெடுத்தது.

படம் நீண்ட நாட்களாக எடுக்கப் பட்டது ஏன்?

குறும்படங்கள் எடுத்து பழக்கப் பட்டதால், சரி ஒரு முழுப் படம் எடுக்கலாம்னு முடிவு செய்தோம். பிறகு அதற்கான கதை, திரைக்கதை விரிவு படுத்துவதில் ஈடுப்பட்டோம்.அதுக்கப்புறம் தயாரிப்பாளர் தேடி அலைந்தோம். ஒருத்தர் கிடைச்சாரு. அவரும் கொஞ்ச

நாள்ல முடியாதுனு பின் வாங்கிட்டாரு. பிறகு நானே படம் தயாரிக்கலாம்னு முடிவு செய்தேன்.எனக்கு பெரிதும் பக்க பலமாக இருந்தது என் மாமாவும்,என் நண்பன் மகேந்திரனும்தான். என் மாமாதான் லோன் போட்டு பணம் கொடுத்தார். பிறகு என் டீம் நபர்களிடம் கொஞ்ச கொஞ்சமாக பணம் சேர்த்தோம்.

கொஞ்ச நாள்ல என் குழுவில் உள்ளவங்க பாதி பேர் விலகி போய்ட்டாங்க. பின்பு புது குழு உருவாக்கி படம் ஆரம்பிச்சோம்.

அதனால பட வேலைகள் முடிய நீண்ட நாட்களாச்சு. படத்தோட மொத்த ஷூட்டிங்கே இருபத்தைந்து நாள் தான். ஆனால் பொருளாதார பிரச்சினையினால் 2015ல் ஆரம்பிச்ச படம் 2018 டிசம்பரில் தான் முடிந்தது.

வீரசந்தானம் அவர்கள் படத்திற்கு எவ்வளவு முக்கியம்?

இந்த கதையின் நாயகன். கதைக்கான நாயகன்தான்அய்யா.அவர்இல்லனாஇந்த படம் இல்ல. நாங்கள் தயாரிப்பாளர்கள் இல்லாது அலைந்து திரிந்த போது, அதை தெரிந்த உடன் அவர் தனக்கு தர வேண்டிய சம்பளத்தை கூட வேண்டாம் என்றார். அவர் முதலில் இது குறும்படம் தான் நடித்து கொடுத்துடலாம்னு முடிவு பன்னி ஒத்துக்கிட்டாரு. பிறகு அந்த படம் ஒரு பெரிய படமாக உருவெடுத்தது அறிந்து கொண்டார். தன் உடல் நிலை சீர் இல்லாததை தெரிந்தும் அதை பொருட்படுத்தாமல் கதைக்காக ஒத்துக் கொண்டார். படத்தில் 90 சதவீதம் அய்யா வலம் வருவார். இந்த படம் வெளிவந்த பிறகுஅவருடையமற்றொருமுகம்தெரியும். இளைஞர்கள் எல்லோரும் அவரை தேட ஆரம்பிப்பார்கள். படம் டப்பிங் வேலைகள் முடிந்து மூன்று மாதத்தில் உயிர் நீத்தார். இன்று வரையிலும் அவரின் தாக்கம் என்னுள் இருக்கிறது. மிக முக்கியமான கலைஞர்.

கலைஞனுக்கு செருக்கு அவசியமா?

செருக்கு என்பது கலைஞனுக்கு மிக முக்கியம். அது அறிவு மேல் சொல்லக்கூடிய பெருமை என்று தான் நான் பொருள் கொள்கிறேன். அதை தான் நான் சொல்லவும் நினைக்கிறேன்.

படத்திற்கு விருதுகள் அவசியமா?

கண்டிப்பாக. விருதுகள் அவசியம்தான். அது வெறுமனே பெயருக்காக அல்ல. விருதை வைத்து படத்தை வணிகத்தை நோக்கி எடுத்துச் செல்லலாம். அதற்காக விருதுகள் அவசியம்தான்.

விருதுகள் பெரும் படம் மட்டும் நல்ல படம் அல்ல.விருதுகள் பெறாத படமும் பல நல்ல படங்கள் இருக்க தான் செய்கிறது. வணிகம் சார்ந்து படத்தை நகர்த்தி செல்ல

விருதுகள் மிக முக்கியமான பாலமாக அமையும். ஞானச்செருக்கு மொத்தம் 23 நாடுகளில் சர்வதேச விருது பட்டியலுக்கு பரிந்துரைக்கப்பட்டது. அதோடு, சர்வ தேச விருதுகள் வாங்கியுள்ளது. கொல்கத்தா சினிமா பெஸ்டிவலில் சிறந்த திரைக்கதைக்கான பாராட்டை பெற்றுள்ளது.

ஞானச்செருக்கு யாருக்கான படம்?

இது கலைஞனுக்கான படம்.எல்லா மக்களுக்குமான படம். இந்த படத்தை பார்க்கும் எந்தொரு கலைஞனாலையும் அமைதியாக இருக்க முடியாது. இந்த படம் ஒரு கலைஞனை அடுத்தக்கட்ட நகர்வை நோக்கி நகர்த்தும்.

ஞானச்செருக்கு கலை படமா? கமர்சியல் படமா?

இங்க பலப்பேருக்கு சினிமா பற்றிய புரிதல் இல்லை. எடுக்கப்படுகிற எல்லா படமும் கலைப்படம் தான். வணிகத்திற்காக திரையரங்கை நோக்கி மக்களுக்காக வரும் எல்லா படமும் கமர்சியல் படம்தான். கமர்சியல் சினிமா என்பது இரண்டு குத்துப்பாட்டு,நான்சண்டைக்காட்சி,பெண் இடுப்பை காட்டுவது மட்டுமல்ல. வணிக சினிமா எல்லாமே கமர்சியல் சினிமாதான். அந்த வகையில் ஞானச்செருக்கு முழுக்க முழுக்க கமர்சியல் படம்தான்.

எந்த பிரச்சினையை இந்தப் படம் பேசுகிறது?

எனக்கான பிரச்சினையை பேசுகிறது. உனக்கான பிரச்சினையை பேசுகிறது. இந்தப் படம் ஒட்டுமொத்த மக்களுக்கான பிரச்சினையை பேசும். ஒரு கலைஞனின் பிரச்சினையை பேசும்.

இதில் கதாநாயகனாக வீரசந்தானம் அய்யா நடித்திருக்கிறார். அந்த கதாபாத்திரத்தின் பெயர் வீரநெடியோன். 80 வயது இயக்குநர். தன் கலையின் மூலமாக மக்களின் பிரச்சினையை ஒரு கலைஞனின் பார்வையில் இருந்து பேசும். அதோடு கலைஞன் தன் படைப்பை சமூகத்தின் முன் வைக்கும் போது அது ஒரு உரையாடலை நிகழ்த்த வேண்டும் என்பது மிக அவசியமான ஒன்று. அதை இந்தப் படம் பேசும். நிகழ்த்தும்.

கலைஞன் இல்லா அரசியல் இல்ல? அரசியல் இல்லா கலைஞன் இல்ல. இதில் அரசியல் உண்டா?

நிச்சயமா இது அரசியல் கலந்த கமர்சியல் படம். இந்த அரசியல் பார்வை என்பது ஒரு கலைஞனின் பார்வையில் இருந்து பேசுவதாகும். கலைஞன் என்பவன் மட்டும் அரசியல் பேச வேண்டியதில்லை. எல்லோரும் அரசியல் பேச வேண்டும். அதிலும் கலைஞன் என்பவன் அரசியல் புரிதலுடன் கூடிய அரசியல் பேச வேண்டும். அதைத்தான் இந்தப் படம் பேசும்.

அதிகாரம் கலைஞனை முடக்குதா?

ஆம். அதிகாரம்தான் எல்லாவற்றையும் தீர்மானிக்கிறது. அதிகாரம்தான் மிகப் பெரிய பலம். ஒரு கலைஞன் தன் படைப்பின் மூலம் சில பிரச்சினைகளை பேசும் போது அது அரசை எதிர்த்து இருந்தால் வெளியிடுவது கடினமான ஒன்றாகிடும். அப்போ நாம் துணிந்து பேசுவதற்கு அதிகாரம் மிக முக்கியமான ஒன்றாகிறது.

வாசிப்பு அனுபவம்?

வாசிப்பு மிக முக்கியமான ஒன்றுதான். நான் தொடக்கத்தில் சின்ன சின்ன புத்தகங்கள் வாசிக்க ஆரம்பிச்ச. அதுக்கப்புறம் அப்படியே தொடர்ந்து பொன்னியின் செல்வன்

போன்ற புத்தகங்கள் வாசித்தேன். நான் எப்போதும் புத்தகம் வாங்குன குறிப்பிட்ட எழுத்தாளர்களுடைய புத்தகம் வாங்க மாட்டேன். அப்படி வாங்க நினைத்தாலும் அது ஆரம்ப விலையே 300, 400 ரூபாய் இருக்கும். நான் பொருளாதார காரணமாக மொத்தமே 500,600 ரூபாய்க்குதான் புத்தகம் வாங்குவேன். அதுவும் சின்ன சின்ன புத்தகமாக நிறைய புத்தகம் வாங்கி படிச்சது. குறைந்தது 500, 600 புத்தகங்கள் படிச்சிருப்ப. அதிலும் மாசோ விக்டர் அவர்களின் புத்தகங்கள் எனக்கு ரொம்ப பிடிக்கும் அவருடைய புத்தகங்கள் எல்லாம் உலகளாவிய அரசியல், பண்பாட்டு, கலாச்சாரத்தை பேசும்.

வரலாற்றை நம்புகிறீர்களா?

நம்பவும் முடியல. நம்பாமலும் இருக்க முடியல. வரலாறு என்பது தனிமனிதனை சார்ந்தே சிலவற்றை இருக்கிறது. வரலாற்றை தாண்டியும் அதை எழுதுபவர் யார் என்று பார்க்க வேண்டிய தேவை இருக்கு.

உங்கபடக்குழுவைபற்றிசொல்லுங்க?

கதை, திரைக்கதை நான் (தரணி ராசேந்திரன்) எழுதியிருக்க. ஒளிப்பதிவு - கோபி துரைசாமி, படத்தொகுப்பு - மகேந்திரன், இசை - சக்ரவர்த்தி, பாடல்கள் - நெய்தல், சத்தம் - கண்ணன், பாபு, காட்சி நிற வடிவமைப்பு - லோகேஷ்வரன், சி.ஜி.ஐ - அரவிந்த்.

சாதி ஒழியுமா?

சாதி ஒழியும், ஒழியனும் அதை தான் விரும்புகிறேன். ஒவ்வொரு தனிமனிதனின் வளர்ச்சியும், கல்வி வளர்ச்சியும், பொருளாதார சமநிலையும் அடையும் போது சாதி ஒழியும் என்கிற நம்பிக்கை இருக்கு.

கலைஞன் களத்தில் பேச வேண்டும் என்பது அவசியமா?

கலைஞன் பேசுவதைக் காட்டிலும்,

உலகின் கொடிய நஞ்சு

உலகின் கொடிய நஞ்சு,
உயிரூட்டும் நாக்கரவச் சொற்கள்,
சுழற்றியே அடித்துக் கொல்லும்,
சுயம் தொலைக்கச் செய்யும் சொற்கள்,
பயமூட்டிப் பம்மிப் பாயும்,
எச்சில் நனைத்த நச்சரவம்!
வெட்டெனத் துண்டாடும் சொற்கள்,
பட்டாய் நஞ்சூறும் வார்த்தை,
பட்டெனவே பாய்ந்து கொல்லும்,
படைகளையும் கொன்றே மாய்க்கும்,
சுட்டுவிடும் நெருப்பெனச் சீறும்,
எச்சில் நனைத்த நச்சரவம்!
பல்லென வேலி இருந்தும்,
கொல்லெனக் கொல்லும் வார்த்தை,
மெல்ல மெல்ல இனிப்பது ஊட்டி,
கொல்வ தொன்றே குறிக்கோளாக்கி,
கூர்த்துவனாய்த் தாண்டவம் ஆடும்,
எச்சில் நனைத்த நச்சரவம்!
எச்சிலில் நனைந்த போதும்,
ஈரமே இல்லா வார்த்தை,
நச்சிலே தோய்த்துத் தோய்த்து,
நாளெல்லாம் வீசி... வீசி,
கொத்தெனக் கொன்று போடும்,
எச்சில் நனைத்த நச்சரவம்!

- கு. கமலசரஸ்வதி

வறக்கை

மூட்டிய தீ
மூச்சடைக்க வைக்கிறது
வெண்சுருட்டு புகை

பாரதி மேகன்

கலை வழியே பேசுவது மிக முக்கியமான ஒன்றாகத்தான் பார்க்கிறேன்.

அவனைக் காட்டிலும், அவன் படைப்புதான் பேச வேண்டும். அதை கொண்டுதான் மக்கள் தன்னை சீர்ப்படுத்தி கொள்ள வேண்டும். அதை வைத்துதான் மக்கள் அடுத்தக்கட்ட நகர்வை நோக்கி செல்ல வேண்டும். இங்கு சுதந்திரமாக பேச, எழுத தடை விதிக்கும் போது ஒருவன் கலை வழியே பேசுவதென்பது மிகப்பெரிய வலிமை. கண்டிப்பாக அப்படி ஒரு நகர்வை ஏற்படுத்தும் ஞானச்செருக்கு.

ஞானச்செருக்கு என்ன ஸ்பெஷல்?

ஞானச்செருக்கு வந்து தன்னாட்சி படங்களுக்கு ஒரு முன்னோடியாகவும், அதிலிருந்து முற்றிலும் ஒரு புதிய பரிமாணத்திலும் அமைந்திருக்கும்.

ஞானச்செருக்கு பணத்தால் உருவான படமே அல்ல. இது முற்றிலும் அன்பாலும், கலை மீதான தாகத்தாலும் உருவாச்சு. ஞானச்செருக்கு ஒரு சுயம்பு.

கதை திருட்டு?

கதைதிருட்டு எங்கிருந்து ஆரம்பமாகுதுனா எல்லாவற்றையும் தமக்குள் வைத்து கொள்ள வேண்டும் என்பதிலிருந்து தான். கதையோ, திரைக்கதையோ இயக்குநர்தான் எழுத வேண்டுமென்பது அவசியமற்ற ஒன்று. எல்லோரும் கதையை புத்தகத்தில் தேடுகிறார்கள். புத்தகத்தில் இருப்பதை படித்து விட்டு அதை மக்களிடத்தில் தான் செயல்டுத்த வேண்டும். அதனால் அந்த கருத்து முழுதும் மக்களுக்கு ஏற்புடையதாக இருக்காது. அதனால் கதையை மக்களிடமிருந்தும், பண்பாடு, கலாச்சாரத்தில் இருந்தும் உருவாக்கினால் அது மக்களுக்கு நெருக்கமாகவும் இருக்கும் கதை திருட்டும் நடக்காது.

சாதி ஒரே வார்த்தையில்?

தேவையற்ற ஒன்று.

மதம் ஒரே வார்த்தையில்?

வணிகம் சார்ந்தகட்டுக்கதை.

அம்பேத்காரிசம், பெரியாரிசம், மார்க்ஸியம் போன்ற இசங்களில் மாற்றம் தேவையா?

கால மாற்றத்திற்கு ஏற்றவாறு இசங்களில் மாற்றம் தேவை. கிட்டதட்ட 50 ஆண்டுகளாக நாம் இசங்களையும் சித்தாந்தங்களையும் வெறுமனே மேடை பேச்சாக தான் பயன்படுத்தி வருகிறோம். அதை பேசுவதைக் காட்டிலும் மக்களிடத்தில் நடைமுறைப் படுத்த வேண்டும். நடைமுறைப் படுத்துவதில் என்ன பிரச்சினை என்று ஆராயனும். பலப்பேர் ஜெய்பீம்னு சொல்லுராங்க ஆனா அதுக்கு என்ன அர்த்தம்னு தெரியாத மக்கள் இருக்க தா செய்றாங்க.

பல மேன்மைவாதிகள் இவர்களின் பெயர்களை வைத்தும், பிம்பத்தை வைத்துமே தன் சுய லாபத்தை அடைந்திருக்கிறார்கள்.

ஞானச்செருக்கு பற்றி ஒரு வார்த்தையில்?

PRIDE OF WISDOM

உலகம் உருண்டையென்பது உண்மைதான்

நன்னிலம் இளங்கோவன்

கைபேசி அழைத்தது... முகச்சவரம் செய்து கொண்டிருந்த சுந்தர்; கையை கழுவிவிட்டு கைபேசியை எடுத்து பேசினான்.

''சொல்லுங்கண்ணே... அலுவலகத்துல ஆடிட்நடந்துகிட்டுஇருக்கு...இன்னையோட முடிஞ்சிடும்... நாளை காலையிலேயே வந்து அப்பாவை அழைச்சிட்டு போறேன்...''

கைபேசியை கீழே வைப்பதற்குள்ளாகவே, சுந்தரின் மனைவி தேவகி, ''என்னங்க... உங்க அண்ணன்தான பேசுனது... இரண்டு நாள் தாமதமானதுமே கைபேசியில கூப்பிட்டுட்டாரு போல... மூத்த பிள்ளைதான... அப்பாவ வைச்சு பார்த்துக்ககூடாதா?''

'உன்னமாதிரிதான அண்ணியும் இருப்பாங்க...' சுந்தர் மனசுக்குள் நினைத்து கொண்டான்.

மறுநாள் விடியற்காலையிலேயே எழுந்தவன் குளித்து முடித்துவிட்டு டிபன்கூட சாப்பிடாமல் அண்ணன் வீட்டிலிருக்கும் அப்பாவை அழைத்து வருவதற்கு பேரூந்து ஏறினான்.

தேவராசு, அரசாங்க உத்தியோகத்தில் இருந்தவர் இரண்டு மகன்களை பெற்றவர். மகன்கள் இருவரும் குடும்பத்தோடு, தனித்தனியே வெவ்வேறு ஊர்களில் வசிக்கின்றனர்.

தேவராசுவும் மனைவி கோமதியும் தனியாகத்தான்வசித்துவந்தனர்.இதற்கிடையே அரசுப்பணியிலிருந்து தேவராசு ஓய்வு பெற்று விட்டார். எதிர்பாராத விதமாக மனைவி கோமதியும் நெஞ்சுவலி ஏற்பட்டு திடீரென்று இறந்துபோக, தேவராசு தனியாக இருக்க வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டார்.

இரண்டு மகன்களும் தனியே இருக்கும் அப்பாவை, தங்களுடன் வந்து இருக்குமாறு கூப்பிடவே இல்லை. உணவகம் ஒன்றில் சாப்பிட்டுக் கொண்டு வாடகை வீட்டிலேயே தனியாக இருந்து வந்தார்.

உணவக சாப்பாடு, தேவராசுக்கு ஒத்துக் கொள்ளாமால் ஒருநாள் உடல் நலக் குறைவு ஏற்பட்டு மருத்துவமனையில் சேரும் நிலை நேரிட்டது.

அப்போது இரண்டு மகன்களுக்கும் ஒரு உடன்பாடு ஏற்பட்டது.

அப்பா வாங்கும் ஓய்வூதியத் தொகையை பெரிய மகன் சேகர் வாங்கிக்கொண்டு, தனது வீட்டில் ஒரு மாதம் தங்கவைத்துக் கொள்வதெனவும், மறுமாதம் இரண்டாவது மகன் சுந்தர் ஓய்வூதியத்தை பெற்றுக் கொண்டு தந்தையை கவனித்து கொள்வதாகவும் தீர்மானம் செய்து கொண்டனர்.

தேவராசு தனது இரண்டு மகன்கள் வீட்டிலும், தங்கியிருக்க மனமில்லையென்றாலும், தனது வயோதிகத்தின் காரணமாக, வேண்டா வெறுப்புடன் தங்கி காலத்தை கடத்தி வந்தார்.

மாலை ஐந்து மணி இருக்கும். அப்பாவுடன் சுந்தர் வீட்டிற்குள் நுழைந்தான். அப்பாவின் கைப்பெட்டியை

வறக்கூ

●
விற்றுத் தீர்ந்த கூடைக்குள்
இன்னும் மிச்சமாயிருக்கின்றது
பச்சையிலை வாசம்.

●
சூரியக் கதிர்கள்
மரத்தின் கீழே பரந்திருக்கின்றன
கறுப்பு இலைகள்.

●
விபத்து நடந்த இடம்
வீதியெங்கும் சிதறிக் கிடக்கின்றன
மேகத்துகள்கள்.

●
வானவில்லின் நிறங்கள்
வாசலிலே கரைந்து கிடக்கின்றன
வண்ணக் கோலங்கள்.

●
விரிந்த பூ
மெதுவாச் சுருங்குகிறது
அட்டைப்படம்.

●
எங்கோ பெய்த மழையை
சுமந்து கொண்டு வருகின்றன
அந்தப்பேருந்தின் இருக்கைகள்

●
காகங்கள் அமரும் அந்தச்சிலையின் கீழ்
மெல்லத் துளிர் விட்டிருக்கின்றது
ஒரு வேப்பங்கன்று.

●
வசந்த காலம்
அறிவிக்கத் தொடங்குகிறது
கூவும் குயிலொன்று.

●
காய்ந்த சருகு
மெல்ல எழுந்து பறக்கிறது
ஓய்வெடுத்த வண்ணத்துப்பூச்சி.

கீர்த்தி கிருஷ்

அறைக்குள் கொண்டு வைத்தான். மருமகள் பெயரளவுக்கு வாங்க மாமா என்று தெரிவித்துவிட்டு சமையலறைக்குள் சென்றுவிட்டாள்.

பள்ளியில் சிறப்பு வகுப்பு முடிந்து, மாலை ஆறு மணிக்கு, சுந்தரின் ஒரே மகன் திலீப் வீட்டுக்குள் நுழைந்தவாறே, ''தாத்தா... எப்ப வந்தீங்க?'' என்று மகிழ்ச்சியில் துள்ளினான்.

தேவராசுவும், மகிழ்ச்சியாக ''இப்பதான் வந்தேன்... நல்லா படிக்கிறியா?'' என்றா.

''நல்லா படிக்கிறேன் தாத்தா'' என்றான்.

மறுநாள், காலை உணவு முடிந்ததும் தேவராசு... சுந்தரிடம் ''நூலகத்திற்கு போயிட்டு வரேன்'' என்று சொல்லிவிட்டு புறப்பட்டுவிட்டார்.

அன்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் வீட்டுப்பாடத்தை படிக்க உட்கார்ந்த திலீப், ''அப்பா எனக்கு ரொம்ப நாளா உங்ககிட்டே ஒன்னு கேட்கணும் போல இருக்கு!'' என்றான் .

''கேளுப்பா... கேளு...''

''அப்பா... நீங்களும், பெரியப்பாவும் தாத்தாவுக்கு இரண்டு பிள்ளைங்கதான...!''

''ஆமாம்... அதுல உனக்கு என்னப்பா சந்தேகம்!''

''இப்ப தாத்தாவ... நீங்களும் பெரியப்பாவும் மாசாமாசம் மாத்தி வைச்சு பார்த்துகிறீங்க... நான் உங்களுக்கு ஒரே பிள்ளையா இருக்கிறதால, உங்களையும் அம்மாவையும் நான் மட்டும்தான் வைச்சு பார்த்துகணுமா...?''

சுந்தரும் அவன் மனைவி தேவகியும் அதிர்ச்சியில் ஒன்றும் பேசமுடியாமல் அப்படியே வாயடைத்து போய் நின்றனர்.

இயற்கையைக் காப்போம்

காடுகளை நம்முன்னோர் காத்த தாலே
காலத்தில் பருவமழை பெய்த தன்று
நாடுகளுக் குள்ளேயும் மரம்வ ளர்த்து
நல்லபடி சூழ்நிலையைப் பாது காத்தார்
வீடுகளின் பின்புறத்தில் தோட்டம் வைத்து
விளைவித்தார் தூய்மையான காற்றை யங்கே
பாடுபட்டு பயிர்வளர்த்தார் வயல்க ளெல்லாம்
பசுமையொடு குலுங்கியது செழிப்பைத் தந்தே!

சீர்போல இயற்றைதந்த ஆற்றை யெல்லாம்
சிதையாமல் கரையமைத்துச் சிறப்பாய்க் காத்தே
ஊர்தோறும் ஏரிவெட்டி மழைநீர் தேக்கி
உயர்நோக்கில் நிலத்தடிநீர் பெருக வைத்தார்
ஊர்ந்துவரும் எறும்புக்கும் அரிசிக் கோல
உணவளித்துக் குருவிகளும் கூடு கட்டப்
பார்த்ததனை வீட்டிற்குள் பாது காத்துப்
பரிவுடனே பிறவுயிரைப் பேணி நின்றார்!

முன்னோர்கள் நமக்களித்த செல்வம் தன்னை
முறையாக நாம்காத்துப் பேணி டாமல்
தன்னலத்தால் வயல்களினை மனைக ளாக்கித்
தாறுமாறாய்த் தொழிற்சாலை கட்டி வைத்துப்
பொன்முட்டை தந்தகாட்டின் மரங்கள் வெட்டிப்
பொட்டலாக்கிச் சுற்றுச்சூழல் மாசு செய்து
நன்நதியில் கழிவுநீரைக் கலக்க வைத்து
நறுங்காறறில் புகைகலந்து நஞ்சாய் செய்தோம்!

ஏரிநீரைத் தூர்த்துவிட்டு நிலத்து நீரை
எந்திரத்தால் தினமுறிஞ்சி காலி செய்தோம்
வாரிதியை அசுத்தமாக்கி வானில் ஓசோன்
வளையத்தை ஓட்டையாக்கி வெப்பம் செய்தோம்
வேரினைப்போல் உள்ளதைநாம் காக்கா விட்டால்
வெறும்மண்தான் நம்முடைய சந்த திக்கு
காரிருளில் பூமித்தான் மூழ்க்கிப் போகக்
கண்ணிழந்த பிள்ளைகளாய் ஆவர் நாளை!

பாவலர் கருமலைத்தமிழாழன்

இப்படியே கடைசி வரைக்கும்...

– பாரவி கே. குமார்

‘நாம சேர்ந்து வாழலாமா?’ என்ற கவிதா கேட்டதும் தினேஷ்க்கு தூக்கி வாரிப் போட்டது. குடித்துக் கொண்டிருந்த காபியை டேபிளின் மீது வைத்து விட்டு அவளைப் பார்த்தான். அவன் என்ன சொல்லப்போகிறான்என்பதிலேயேஅவள் கவனம் இருந்தது. ‘என்ன இந்தப் பெண் படக்கென்று கேட்டு விட்டாள்... இதன் பின்னான விளைவுகள் எப்படியிருக்கும் என்பதை யோசித்துத்தான் கேட்கிறாளா?’ என்ற யோசனையோடு பதில் சொல்லாமல் அமர்ந்திருந்தான்.

தாரிணியும் தினேஷும் காதலர்கள் அல்ல... ஒரே அலுவலகத்தில் பணிபுரியும் புரிதலுள்ள நண்பர்கள். அவர்கள் நட்பில் இதுவரை எந்தத் தடங்களும் வந்ததில்லை. அதற்குக் காரணம் முதுகுக்குப் பின்னே யார் என்ன பேசினாலும் இருவரும் அதைப் பற்றி கவலைப்படுவதில்லை. நம் மனசு சுத்தமாயிருக்குல்ல அது போதும். மத்தவங்க என்ன பேசினா நமக்கென்ன என்பதே இருவரின் கருத்தாக இருக்கும்.

தாரிணி இங்கு வேலைக்கு வந்தபோது எல்லாருடனும் சகஜமாகப் பழகினாள். அவளின் பகட்டில்லாத நட்பு எல்லாருக்கும் பிடித்திருந்தது. தினேஷோடு ஆரம்பத்தில் சாதாரணமாக பேச ஆரம்பித்தவள்,

அவனின்அன்பானபேச்சும்மற்றவர்களுக்கு உதவும் குணமும் அவனோடு நெருக்கமான நட்பை ஏற்படுத்திக் கொண்டு விட்டாள். அலுவலகத்தில் மட்டுமின்றி மாலை நேரத்தில் அவனோடு வெளியில் செல்வதைக் கூட அவள் விரும்பினாள். இப்படித்தான் இருவருக்கும் நட்பு ஏற்பட்டது.

தாரணிக்கு திருமணம் ஆகி சுவாதி பிறந்து சரியாக ஆறாவது மாதத்தில் கணவன் சந்தோஷை விபத்து எடுத்துக் கொள்ள அவளின் சந்தோஷமும் அத்தோடு போனது. அதன் பின் அம்மா வீடுதான் அவளுக்கு வாழ்க்கையானது. வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடக்காதே... ஏதாவது வேலைக்குப் போனாத்தான் உன்னோட மனநிலை மாறும்... சுவாதி யோட உன்னை ஏத்துக்கிற மாதிரி மாப்பிள்ளை பார்க்கலாம் என்று அப்பா சொன்னபோது வேலைக்குச் செல்ல ஒத்துக் கொண்டவள் எம்மனசுக்குள்ள சந்தோஷ் இன்னும் வாழ்ந்துக்கிட்டுத்தான் இருக்கார்; ப்ளீஸ் திருமணம் குறித்து இப்போது பேச வேண்டாம் என்று சொல்லிவிட்டாள்.

இவளைப் போல்தான் தினேஷும், திருமணமாகி ஸ்வேதா பிறந்து அவளுக்கு ரெண்டு வயதாகும் போது அவனின் மனைவி கல்பனாவை டெங்குக் காய்ச்சல் வாரிக் கொண்டு போய்விட்டது. பொட்டப் புள்ளையை வச்சிக்கிட்டு எப்படி தனியா வாழ முடியும்... பேப்பர்ல விளம்பரம் கொடுப்போம்...விதவையோவிவாகரத்தான பொண்ணோ நமக்கு தோதான குடும்பமாக இருந்தால் ரெண்டாவது திருமணம் செய்து வைக்கலாம் என அம்மாவும் உடன் பிறப்புக்களும் பேச, என்னால கல்பனாவோட வாழ்ந்த வாழ்க்கையை மறந்துட்டு அடுத்தவளோட குடும்பம் நடத்த முடியாது... இனி என்னோட மேரேஜ் குறித்துப் பேசாதீங்க... ப்ளீஸ்... என்னால என் மகளை நல்லா வளர்க்க முடியும் என்று சொல்லிவிட்டான். இப்போது இரண்டாம் வகுப்பு படிக்கும் ஸ்வேதாவை அவனின் அம்மாதான் பார்த்துக் கொள்கிறார்.

மலேசியத் தமிழர்

சொந்த பந்தம் துறந்துவிட்டு
அடிமைகளாய்த் தாய்மண்ணை விட்டு
திக்கற்றப் பெருங் காட்டுக்குள்ளே
மொழியறியா மலேசிய நாட்டுக்குள்ளே
ஆட்டுமந்தைக் கூட்டம் போலே
ஆவியற்ற உடல் ஏந்திக்கொண்டு
வெள்ளையரின் நரித் தந்திரத்தாலே
வேதனையுடன் குடி புகுந்தோம்.

தமிழன் ஆண்ட பெரும்வரலாறு
கற்றபோது மகிழ்ந்த மனம்
அடிமை நாமென நினைக்கையிலே
கதறியது இங்கே யாரறிவார்
ஆனாலும் நெஞ்சுரம் இழக்கவில்லை
அனுதினம் உழைப்பை மறக்கவில்லை
தமிழன் என்ற ஒற்றைச்சொல்
தந்த திமிர் மறையவில்லை

அடிமைக் கோலம் மாறியபின்
அன்னை மடிக்காய்க் காத்திருந்தோம்
அன்னை மண்ணில் ஈரமில்லை
அழைப்பதற்கு அங்கே யாருமில்லை
சொந்த மண்ணில் வாழ்வதற்கு
சொந்தங்கள் மனம் ஏற்கவில்லை
அன்னை மண்ணே எங்களுக்கு
அந்நிய மண்ணாய்ப் போனதின்று!

பேராசிரியர் கவிஞர் முனைவர்
ரத்னமாலா புரூஸ்,
நாகர்கோயில்

«சாரி... தினேஷ்...» தாரிணியின் குரலால் அவன் நினைவில் இருந்து மீண்டான்.

«எ... எதுக்கு சாரி...»

«இல்லை... நான் அப்படி கேட்டிருக்கக் கூடாதுல்ல...என்னையஎவ்வளவுஉயர்வா நினைச்சிருப்பீங்க... இந்த பொண்ணு நட்பை கொச்சைப்படுத்திட்டாளேன்னு வருத்தப்பட வச்சிட்டேன்... சரி அதை விடுங்க... போகலாமா..?» என்று எழுந்தாள்.

«வருத்தப்படுற மாதிரி என்ன கேட்டே... மனசுல உள்ளதைக் கேட்டே இது தப்பில்லையே... ஆரம்பத்துல இருந்து நம்ம நட்பை கொச்சைப்படுத்துனவங்க மத்தியில நீங்க சொன்னதுதான் சரியின்னு நாம நிரூபிக்கணும்ன்னு நினைக்கிறே... இது சரியா வருமான்னு யோசிச்சியா...?»

«இதுல யோசிக்க என்ன இருக்கு... இதுவரைக்கும் நாம ஒருத்தரை ஒருத்தர் நல்லா புரிஞ்சி வச்சிருக்கோம்... கடந்து போன வாழ்க்கை நம்ம ரெண்டு பேருக்குமே வலி நிறைந்ததுதான்... அந்த வலியை கடைசி வரைக்கும் சுமக்கத்தான் போறோம்... நம்ம பாரத்தையும் இறக்கி வைக்க ஒரு பாதுகாப்பானமடிஇருந்தாதேவலைதானே... இனி ஒரு வரன் பார்த்து... அதுவும் நம்மளை மாதிரி தேடிக் கண்டுபிடிச்சி... ஒரு வாழ்க்கை அமைச்சி... அதுவும் சரியில்லாம போனா தாங்குற மனநிலையில நாம இருக்கோமா சொல்லுங்க... பணத்துக்கும் சொத்துக்கும் மேரேஜ் பண்ணிக்கிட்டு நீ அவன் கூட இப்படித்தானேஇருந்தே...அவன்உங்கிட்டே இப்படியெல்லாம் நடந்துக்கிட்டானா என சொல்லாலே கொல்ற மனிதர்களையும் பார்த்திருக்கிறோம்தானே... அதான் மனசுல பட்டதைக் கேட்டேன்... ஆனா உங்களோட மனசுல என்ன இருக்குன்னு தெரிஞ்சிக்காம படக்குன்னு கேட்டது தப்புத்தானே..»

«தப்பு... தப்பு... அதை விடு... பிராக்டிக்கலா யோசி... முதல்ல நம்ம ஜாதி... அப்புறம் எனக்கு ஆறுவயசுலஒருபொண்ணுஇருக்கா...உனக்கு மூணு வயசுல ஒரு பொண்ணு... இதுவரைக்கும் கல்யாணமே வேண்டான்னு சொன்ன நாம இப்ப மேரேஜ் பண்ணிக்கணும்ன்னு நினைக்கிறது சரியா வருமா?»

«ஸ்வேதா, சுவாதி ரெண்டு பேருக்கும் நாம நல்ல அம்மா அப்பாவா இருப்போம்... நமக்குள்ளநல்லபிரண்ட்ஸாஇருப்போம்... தாலி கட்டித்தான் வாழணுமின்னு இல்ல... லிவிங் டூகெதர் தட்ஸ் ஆல்...»

«ம்... லிவிங் டூகெதர்... இப்ப நல்லாயிருக்கும்... ஆனா பின்னாடி குழந்தைகளோடவாழ்க்கைபாதிக்காதா..?»

«ம்.... பாதிக்கத்தான் செய்யும்... சரி விடுங்க... இதெல்லாம் சரி வராது... வாங்க போகலாம்...»

«இரு போகலாம்... எதுக்கு அவசரப் படுறே...? திடீர்ன்னு நீ கேக்குறேன்னா நல்லா யோசித்துத்தான் இந்த முடிவுக்கு வந்திருப்பேன்னு எனக்குத் தெரியும்... உன்னோட மனசைப் பாதிக்கிற மாதிரி எதுவும் நடந்ததா?»

«ஏய்... அப்படியெல்லாம் இல்லை.... நம்ம முதுகுக்குப் பின்னால பேசுறவங்களை நான் மனிதர்களாகவே நினைக்கிறதில்லை... ஆனா சில நேரங்களில் முகத்துக்கு முன்னால பேசுற ஒரு சில வார்த்தைகள் தேள் கொட்டின மாதிரி துடிக்க வைக்குது... ஆபீசிலயின்னு இல்ல... வீட்டிலும்தான்... நேத்து அத்தை வந்திருந்தாங்க... நாம பிரண்டாப் பழகுறதை யாரோ அவங்ககிட்ட வேற மாதிரி சொல்லியிருக்காங்க... என்னோட மகனை இழந்துட்டு நாங்கள்லாம் தவிச்சிக்கிட்டு இருக்கோம்... நீ ஆபீசில மினுக்கிக்கிட்டு திரியிறியாமே... உன்னோட உடம்புக்கு சுகம் தேவைப்படுதோன்னு கேவலமாப் பேசுனாங்க... அப்பா கூட அவங்க நல்ல பிரண்ட்ஸ்... யாரோ உங்கிட்ட தப்பாச் சொல்லியிருக்காங்க... அப்படியே அவ அவரை கல்யாணம் பண்ணிக்கிறேன்னு சொன்னா நான் பண்ணித்தான் வைப்பேன்... இப்போதைக்கு அவ மனசை

நோகடிக்காம இங்க இருந்து போயிடுன்னு கத்தி விட்டுட்டாரு... பிரண்ட்லியா பழகுறதுக்கும் உடம்பு சுகத்துக்கும் என்ன இருக்கு... புருஷன் செத்துட்டா ஒரு பொண்ணை மூலையில முடங்கச் சொல்ற சமூகம் ஆண் பிள்ளைக்கு மட்டும் கல்யாணம் பண்ணி வைக்கணுமின்னு ஆசைப்படுதே... நியாயமா...? இதே நான் செத்திருந்தா சுவாதிய அப்பாக்கிட்ட கொண்டாந்து கொடுத்துட்டு அவருக்கு கல்யாணம் பண்ணி இன்னேரம் குழந்தை இருக்கும்... நான் கல்யாணம் பண்ணி வையுங்கன்னு சொல்லலை... எனக்குள்ள இருக்கிற வலியைப் போக்கிக்க என்னை கொஞ்சம் சந்தோசமா இருக்க விடுங்கன்னு சொல்றேன்... அது அவங்களுக்கு பிடிக்கலை...» கண் கலங்கினாள்.

«ஏய் இப்ப எதுக்கு அழறே..? இந்தக் காலத்துலயும் பொண்ணை மூலையில கெடக்கச் சொல்றது ஆச்சர்யமா இருக்கு... ஆணும் பெண்ணும் பழகினா அது உடல்

பெண்களின் தேடல் மற(றை)ந்த நிறைவு...

அந்திக்கருக்கலில் முழுமதியின் முகமலர,
இயந்திர உடலயர நிறைவில்லா மனமயர,
தேவைவரம் வேண்டி விழிமூடி நான்தொழ,
தோன்றிய தேவதை வரமென்ன...எனவினவ...

மூச்சிரைக்க தலைசாய்த்து முழுமதி இரசித்திட,
கால்சோர நானமர்ந்து கைதட்டில் உணவுண்ண,
பகலவன் ஒளிமறந்து நீள்தூக்கம் நான்காண,
உள்ளம் கனம்குறைய பிறர்கேட்க நான்விளம்ப,

அன்பென்ற அருமருந்தில் ஆறுதலாய் தோள்சாய,
கருவறைபோல் இருலறையில் தயக்கமின்றி நான்மயங்க,
வாரிசுகள் புகழ்கொள்ள என்வாழ்வு எனதாக,
கேட்பதிலே பெற்றதுபோல் இன்புற்றிருக்க - அந்தோ...

கொக்கரிக்கும் சேவலோடு சுற்றத்தோடு மகனுமெழ,
கொங்கையில் சுரந்தமு தருந்தவேண்டி யவனுமழ,
தேடல்களோடு, தேவைகள்மறைய, தேவதை யுமகல,
சுற்றத்திற்கு வரமீயும் கடவுளானேன்...நான்...உளமகிழ....

கிறிஸ்டா அறிவு
அருப்புக்கோட்டை.

சுகத்துக்குத்தான்னு படிச்சவங்களே நினைக்கும் போதுதான் வேதனையா இருக்கு... இங்கபாரு உன்னோட சிறகை ஒடிச்சு யாராலயும் மூலையில போட முடியாது... நீ வாழப் பிறந்தவள்... இன்னும் ரொம்பத் தூரம் பறக்க வேண்டியிருக்கு... சிறகை விரி... சும்மா அவங்க சொன்னாங்க இவங்க சொன்னாங்கன்னு சராசரி பொண்ணா அழுதுக்கிட்டு இருக்காம...» என்றான்.

«ம்... ராத்திரியெல்லாம் ஒரே யோசனை... தூக்கமே இல்லை... அதான் உங்ககிட்ட கேட்டுட்டேன்... சாரி.... ஓகே... வாங்க போகலாம்...» என எழுந்தவளுடன் அவனும் எழுந்து பணம் கொடுத்து விட்டு வெளியே வந்தார்கள்.

«நான் ஒண்ணு கேட்டா தப்பா நினைக்க மாட்டீங்களே தினேஷ்» என்றாள்.

«என்ன சொல்லு...?»

«இப்படியே கடைசி வரைக்கும் இருக்க எண்ணமா...? இல்லை...» மெல்ல இழுத்தாள்.

சிரித்தபடியே «நான் வேண்டான்னு சொன்னாலும் அம்மா பொண்ணு பாத்துக்கிட்டுத்தான் இருக்காங்க... எனக்கு ஸ்வேதாவோடவாழ்க்கைகுறித்தபயமிருக்கு... வர்றவங்க எப்படி என்னன்னு தெரியாது... மாற்றாந்தாய் மனப்பாண்மையோட பிள்ளையை கையாண்டா, என்னோட வாழ்க்கை சூனியமாப் போகும்... விதிச்சது இதுதான்னு இப்படியே ஒட்டுறதா... இல்லை ஸ்வேதாவுக்காக ஒரு வாழ்க்கை அமைச்சிக்கிறதான்னு கொஞ்ச நாளா மனசுக்குள்ள போராட்டம்.» என்று அவளைப் பார்த்தான்.

«ம்... சரி எதையும் மனசுல வச்சிக்காதீங்க...»

«எதை... இங்க பாரு நமக்குள்ள புரிதல் இருக்கு... உலகம் ஆயிரம் பேசலாம்... அதுக்காக நாம வளைந்து கொடுக்கணுமின்னு இல்ல... நீ சேர்ந்து வாழலாமான்னு கேட்டதுக்கு நாம மேரேஜ் பண்ணிக்கலாமான்னு கேட்டிருந்தா நம்மோட புரிதல்ல ஒரு அர்த்தம் இருக்கும்... நம்ம குழந்தைங்களுக்கும்சந்தோஷமானவாழ்க்கை கிடைக்கும்... நாம மேரேஜ் பண்ணிக்கிறதுல உனக்கு ஆட்சேபனை இல்லைன்னா நானே உங்கப்பாக்கிட்ட வந்து பேசுறேன்...»

அவள் ஒன்றும் சொல்லாமல் நிற்க, «அது சரி இப்ப நான் சாரி கேட்கணுமோ?» என்றான்.

«இதை அப்பவே சொல்லியிருக்கலாமே தினேஷா...» என்று அவள் சிரிக்க, அவனும் சேர்ந்து கொண்டான்.

■

ஒற்றைக்குரல்

களிங்கில் நீரளம்பி வரும்
பாதங்களில்
சிக்கித்தவித்தது
ஓடைக்கரையில் உயர்ந்து
நிற்கும்
ஆலமரக் குயிலின்
ஒற்றைக்குரல்.

நீரில் எதிரேறும் கெண்டை
குரல் பற்றி இழுக்க
இமைக்க மறந்தன விழிகள்.

மூச்சோடு முனைந்து
உயிரைப் பிடித்தது குரல்.

அரைமயக்க நினைவில்
பதறிக்கிடந்தது மனம்.

பாலும் குரல்
மறுபடியும் மறுபடியும்
தனிமையைத் தின்றது!

பி.மதியழகன்.
புதுவை.

சருகுகளின் இருத்தல்கள்

காற்றின் தயவால்தான்
கண்களில்படுகின்றன சருகுகள்.

பச்சையமில்லாத பரிதவிப்பால்
பச்சை இலைகளோடு
சரிசமமாய் வாழும் இச்சையோடு
பறந்து பறந்து,
பறையடித்துத்திரியும் சருகுகள்.

மரங்கள் அவற்றை
கழற்றி விடுவதில்தான்
சுய அழகு பெறுகின்றன.

ஈரமற்ற
இந்தச் சருகுகளால்தான்
சுற்றாடலும்
சுய அழகு கெடுகின்றன.
எனினும்
சருகுகள் வாழவும்
இடம் கொடுக்கின்றன.

சருகுகளின் பாடல்கள்
அபத்தமானவை.
அவற்றின் பாடல்களில்கூட ஈர்ப்பு
அடுத்தவர்கள் பற்றிய
கருணையிருக்காது.

வதந்திகளப் பரப்பவும்
வாய்ப்பானவை சருகுகள்தான்.
அவற்றின் பாரமற்ற உடலால்
வதந்திகளைச் சுமந்துசெல்ல
தாமதம் ஏற்படுவதில்லை.

எதார்த்தங்களைச் சுமப்பதில்
அவற்றிற்கு
சுயபெறுமதிகளுமில்லை.

சருகொன்று பாடும்போது
சுற்றாடலிலுள்ள
சருகுகளின் கூட்டம்
எங்கிருந்தோ வந்துசேர்ந்து
ஒத்தூதுகின்றன.
பக்கவாத்தியங்கள் வாசிக்கவும்
சுருதிகூட்டவும் தாளம்போடவும்
கைகோர்த்துக் கொள்கின்றன.

பாவம் சருகுகள்.
அவற்றின் இருத்தலைப்பேண
எத்தனை பிரயத்தனங்களை
மேற்கொள்கின்றன.

சருகுகள்மீதும் இரககப்படுவோம்
அவற்றின்
நிலையாமை கருதி.

ÄD\VÍmçÅ\£ÅV
இலங்கை.

ரகுராமன் எனது அப்பா

கலா வர்ணன்
எஸ்.எஸ்.எம்.றபீக்

தாத்தா தாத்தா கண்ணைத் திறந்துப் பாருங்க. எனக்கு வேலைக்குப் போக டயம் ஆயிடிச்சி.

தியானத்தில் மூழ்கியிருந்த வேலாயுதம், பவானி கண்ணு அதுக்குளாளாற டயம் எட்டாயிடுச்சா என்று கேட்ட படி கடிகாரத்தை பார்த்தார் நிமிர்ந்து.

ஏழரை ஆகுது தாத்தா, இன்றைக்கு எங்க ஸ்கூல்ல இன்ஸ்பெக்ஷன். அதனால டீச்சர்ஸ் எல்லாம் சீக்கிரம் போயாகணும்.சரிம்மா, அப்பா படத்தை வணங்கிட்டு கிளம்பு. பத்திரம்.

சரி தாத்தா. அம்மா கிளம்பறேன். சொல்லி நடையை துரிதப்படுத்தி தெருவை அடைந்தாள்.

அதிகரித்த வியர்வையில் புடவை சிக்கிக் கொள்ள கையால் இழுத்து விட்டபடி நடந்தவள் தன் பின்னால் ஏதோ கண்காணிக்க நியமித்தது போல் ஒரு வாரமாக தொடர்ந்து வரும் அவன் இன்றும் தொடர்ந்து வர சலிப்புடன் சே. என்ன இவ்வளவு மோசமானவனாக இருக்கிறானே. வீட்டுக்கு தெரிந்தால் என் வேலைக்குத்தானே வேட்டு வைப்பார்கள். என்று மனதுக்குள் கறுவிக்கொண்டே பள்ளியை அடைந்தவள் வேலையில் மூழ்கி அவனை மறந்தாள்..

ஞாயிறு காலை காபி குடித்தபடி நாளிதழைப் புரட்டிக்கொண்டிருந்த பவானி அழைப்பு மணி ஒலிக்க கதவைத் திறந்தவள் அதிர்ச்சியில் உறைந்து போனாள்.

பூட்டிய க்ரில் கேட்டில் சாய்ந்த படி நின்றுகொண்டு இருந்தான் அவன். வெளியே வந்தாள் பவானி. அவளைக் கண்டதும் மெல்லிய புன்னகையைச் சிந்தினான்.

அருகில் சென்ற பவானி, “என்ன விஷயம்?” எனக் கேட்டாள்.

அவன் மெதுவாக “உங்க பெயர்?” என்று கேட்டபோது, “பவானி” என்றாள்.

தயங்கியவனாக.. ‘‘அப்பா...’’ என இழுத்தான்..

‘‘அப்பா இல்லை.. தாத்தா மாத்திரம் தான்’’ என்றாள்.

தலைகுனிந்தவனாககண்ணீர்வடித்தான். பவானிக்கு பாவம் என்றாகிவிட்டது. “வாருங்கள், உள்ளே இருந்து பேசலாம்” என அழைத்தாள்.

உள்ளே வந்தவனை, ‘‘இருங்கள்’’என்று சொல்லிவிட்டு, உள்ளே சென்றாள். சுற்றும் முற்றும் வீட்டை நன்றாகவே பார்த்தான்.

தேநீரைக் கொண்டுவந்த பவானி, “குடியுங்கள்” என்று கொடுத்தாள். குடித்து முடியும் வரை அவன் ஒன்றுமே பேசவில்லை.

‘‘சொல்லுங்கள்’’ என்று கதையைத்

தொடர்ந்தாள் பவானி. ‘‘நான் சுரேஷ். எனது அப்பாவைத் தேடி வந்தேன்’’ எனச் சொன்னபோது, ‘‘அப்பாவா.. யார்?‘‘ என்று கேட்டாள் பவானி.

‘‘ரகுராமன்’’ என்றான் ..

‘‘ரகுராமனா?... அவர் என் அப்பா’’ என்றாள் பவானி.

இருவரும் கதைத்துக் கொண்டிருக்கும் போது தாத்தா வேலாயுதம் அங்கே வந்தார்.

‘‘என்னதாத்தா..?ரகுராமன்இவருடைய அப்பாவாம்..’’ பவானி சொன்னபோது...

‘‘எந்த ரகுராமன்? என்று கேட்ட தாத்தாவிடம், தன் பாக்கட்டில் இருந்த ஒரு போட்டோவை எடுத்துக் காட்டினான் சுரேஷ்.

ஆமாம், அதே ரகுராமன் தான். சந்தேக மில்லை.. ‘‘இவர் என் அப்பா’’ என்றான்.

“ஆமாம்மா... இவன் உன் அப்பாவின் முதல் தாரத்துப் பிள்ளை. இவனையும் தாயையும்கைவிட்டுவந்தேஉன்அம்மாவைத் திருமணம் செய்தார். இதனைப் பின்பு தான் நான் அறிந்துகொண்டேன். ஆனால், இவர்கள் எங்கிருக்கிறார்கள் என்று எனக்குத் தெரியாது. இன்றுதான்காண்கிறேன்”என்றார் வேலாயுதம்.

மகிழ்வோடு எழும்பிய சுரேஷ், ‘‘நான் வருகிறேன்.. கண்டுபிடித்தது சந்தோசம். அடிக்கடி வருவேன். அம்மா இப்போது இல்லை. என்னால் எந்தப் பிரச்சினையும் உங்களுக்கில்லை. வந்து போவேன்’’ என்றவாறு விடை பெற்றான் சுரேஷ்...

‘‘சரி அண்ணா’’ என்று விடை கொடுத்தாள் பவானி.

‘‘நல்லது தம்பி, போய்ட்டுவா’’ தாத்தா வேலாயுதமும் விடை கொடுத்தார். ■

கந்தல் ஆனான் கடைக்கண்ணால் ...

பாடல் என்பேன்
  பருவத்தின் கிறுக்கலை
ஆடல் என்றேன்
  காலத்தின் தள்ளலை

ஊடல் கொண்டேன்
  வினையின் உந்தலால்
மடந்தை பெண்மைக்கு
  மட்டுமா - ஆண்மைக்கும்

மறைந்து மறுக்கப்
  பட்டது - என்னுள்ளும்
மறைவாக நீத்தெறித்த
  கடைக்கண் மொழியாலே

மருளும் கயலால்
  மருகினேன் தினமே
அருளும் கூர்
  தாமரை விரிவிழியிலே

தொலைந்தேன் என்னைக்
  காணாதுக் கண்டேன்
அலையும் மனச்சுடரில்
  நிலைத்தாய் ஒளியாய்

அமுதென்றான் நகைத்தேன்
  அறியாமை மிளிர
யாழென்றான் தவிர்த்தேன்
  புரியாமை சிரிக்க

உயிர்ப்பா யுணர்ந்தேன்
  விரியா மொட்டு
உயிர்த்தெ டுக்கும்
  உயிரை மூச்சாக

விழிவழி ஜாலம்
  இதுயென தீட்சை
பழியாய் கிடந்து
  பெற்றேன் பேரானந்தமாய்

இரா.விஜயகல்யாணி

நூல் மதிப்புரை

குழந்தை வரைந்த காகிதம்
ஆசிரியர் : இளவல் ஹரிஹரன்

தமிழின் செல்லக் குழந்தை யான மதுரைக்கவிஞர் இளவல்ஹரிஹரன். தமது ஆழமான சிந்தனைகளை.. அழகிய கவிதைகளாக மாற்றுவதில் கைதேர்ந்தவர். இவருடைய கவிதை களில் தத்துவம், காதல், இயற்கை, சிற்றுயிர்களை சிறப்பித்தல், சமுதாய அவலம் போன்றவை நிரம்பியிருக்கும்.

சுந்தர சௌராஷ்டிர மொழியை தாய் மொழியாகக் கொண்டாலும்.. தமிழின் மீதுள்ள மையலால், ஆகச் சிறந்த படைப்புகளைதமிழ்இலக்கியஉலகிற்கு அளித்திருக்கிறார்.

இதுவரை ஐந்து கவிதை நூல்கள்.. ஐந்து மொழியாக்க நூல்கள்.. சிறுகதைகளென நிறைய எழுதி இலக்கிய உலகில் தனக்கென ஒரு இடத்தை தக்க வைத்துள்ளார்.. பல விருதுகளுக்கு சொந்தக்காரர்.

திருமதி. சாந்தாதத் அவர்களின் கட்டுரை வாயிலாக.. தெலுங்கிலிருந்து இறக்குமதியான நானிலுயெனும் நான்கு வரி கவிதைகள், தமிழில் தன்முனைக் கவிதைகளென கவிச்சுடர் கா.ந கல்யாணசுந்தரம் அவர்களால் பெயரிடப்பட்டு. குழுமம் ஆரம்பிக்கப்பட்டது. அதில் கவிச்சுடர், கவிஞர் அனுராஜ் மற்றும் நானும் முதலில் எழுத ஆரம்பிக்க, நூற்றுக்கணக்கான கவிஞர்கள் இந்த வடிவத்தின் பால் ஈர்க்கப்பட்டு கவிபடைக்க தொடங்கினர். அச்சமயத்தில் அனைவரையும் தன் வசீகர எழுத்துக்களால் திரும்பி பார்க்கச்செய்தவர் வேறு யாருமல்ல. இந்நூலின் ஆசிரியர் கவிஞர் இளவல் ஹரிஹரன் தான்.

அதோடு நின்று விடாமல், தமிழின் முதல் தன்முனைக் கவிதை நூலை இயற்றி, தமிழுக்கும், தன்முனைக் கவிதை குழுமத்திற்கும் பெருமை சேர்க்கும் வகையில் ஓவியா பதிப்பகம் வாயிலாக.. அதன் ஆசிரியர் கவிஞர் வதிலை பிரபா அவர்களின் சிறந்த நூல் வடிவமைப்பில் இந்நூல் சிறப்பாக வெளிவந்துள்ளது..

கவிஞர் ஆரூர் தமிழ்நாடன் அவர்கள் அணிந்துரை யெழுத, மோதிரக்குட்டு வாங்கு வதைப் போல, திருமதி சாந்தா தத் அவர்களும் வாழ்த்துரை அளித்துள்ளார்.

குழந்தை வரைந்த காகிதமென படிமத்தில் தன்னையேகவிஞர்இளவலாகஅறிமுகப்படுத்துவதை பார்க்க முடிகிறது.. அட அவர் பெயருக்கும் பொருத்தம் தானே.

தன்னடக்கத்துடன் கவிஞர் கூறினாலும், தன்முனைக் கவிதைகள், இலக்கியச் சோலையில் நறுமலர்களாய் மிளிர்கின்றன.

இதோ சில கவிதைகள் உங்களுக்காக

காதலியை காணும் பொழுதெல்லாம்
கண்ணில் விழும் தூசி
அருகில் அவள்
கணவரை கண்டு

கவிதையில் முன்னாள் காதலனின் மன நிலையை படம் பிடிக்கிறார்..

கவிஞர்களுக்கு தனிமை பிடிக்கும் என்பதை உணர்த்தும் விதத்தில்..

மழை தூறுங் குளிர்
மனந்தூவும் நினைவுகள்
தனிமையில் பிறக்கும்
தன்முனைக் கவிதைகள்

இவ்வரிகளில் கவிமனம் மணக்கிறது, கவிதையில் மயங்கி கிடக்கும் பொழுதே..

பாலியல் வன்முறை
என்ன தீர்வு காண
அடித்து.. நறுக்கி
மிதித்து எரிப்பதைத் தவிர..

இக்கவிதையில் பாரதியின் வரிகள், மோதி மிதித்து விடு பாப்பா என்பது போல, சமுதாய அவலத்தைக் கண்டு வெகுண் டெழுகிறார்..

மனிதமனம் இயல்பிலேயே இயற்கையை இரசிக்கும் குணமுடையது என்பதற்கு சான்றாய்..

தனிமையை
நிறைத்து விடுகிறது
எங்கிருந்தோ வரும்
ஒற்றைக் குயில் பாட்டு..

மனதை நிறைக்கிறது. ஒவ்வொரு படைப்பாளியும்இதைத்தானேவிரும்புவார்கள்..

பேராசை மனம்
பருகத்துடிக்கும்
பெருங் கவிதைக்
கடல்..

என கவிதை விரிகிறது..

ஏழையின் வறுமையை குறிக்கும் அதே நேரத்தில், உயிரினங்கள் மீதுள்ள அன்பை வெளிக்காட்வதாய் ஒரு கவிதை..

பால் மணம்
வீசுகிறது தொழுவத்தில்
விற்ற பின்னும்
பசுவையும்.. கன்றையும்..

என்ற வரிகளில் மனம் நெகிழ்கிறது..

கவிஞருக்கு கவிதையும் பிடிக்கும்.. கவிதையை எழுத வைக்கும் காதலியையும் பிடிக்குமென தோன்றுகிறது..

சிற்றிதழாய்
அவ்வப்போது நீ
வாராத போதும் உன்
வாழ்நாள் சந்தாக்காரன் நான்..

இங்கு, இலக்கிய வரிகள் காதலியுடன் உறவாடுகிறது..

எத்தனை முரண்கள் தகப்பன், தனயன் உறவுகளில் இருந்தாலும், வாழ் நாள் முழுவதும் தோளில் சுமந்த பந்தத்தை மறக்க முடியுமா?

வெறுமையான நாற்காலி
பார்க்கும் போதெல்லாம்
விரைந்து தேடுகிறது
அப்பாவின் நினைவு..

எனும் வரிகளில் தந்தை மீதுள்ள பாசத்தை வெளிப்படுத்துகிறார்.

பக்கங்களை புரட்ட புரட்ட.. கவிஞரின் கவிமனம் வானில் சிறகடிப்பதை உணர முடிகிறது..

தன்முனைக் கவிதை வகைமை நூல் களில், தனி மனிதரின் தொகுப்பாக வந்திருக்கும் முதன்மை நூல். மிகச்சிறந்த படைப்புகளுடன் செறிவு மிகுந்ததாக இருக்கிறது..

வாசகர்கள் இந்நூலை வாங்கி, வாசித்து பயன்பெற வேண்டும்..

சாரதா க. சந்தோஷ்,
ஐதராபாத்

உயர்குடி

அழுக்கென்றே பழகிவிட்டோம்
உழைக்கின்ற மக்களை,,
பழகிடாது விட்டுவிட்டோம்
உழவென்னும் மகத்துவத்தை,,

அறிந்தே கடக்கிறோம்
அழிவினைக் கொடுக்கிறோம்,,
நஞ்சுக்களின் அடிமையாகி
நல்லதைத்தான் விடுக்கிறோம்,,

உணவின்றி வாழ்வேது
உணராது கடக்கிறோம்,,
உழவின்றி உணவேது
உணராது தவிர்க்கிறோம்,,

சட்டைகள் இல்லாதவனை
எட்டநிற்கச் சொல்கிறோம்,,
சேற்றுக்குள் உழைப்பவனை
நாற்றமென்று உரைக்கிறோம்,,

மாடுகள் மேய்பவனை
மதிக்காது கடக்கிறோம்,,
அவர்களளிக்கும் பாலுக்கு
வரிசையில் கிடக்கிறோம்,,

விதையாக மண்ணுக்குள்
புதைந்தேதான் போகிறான்,,
நீயுண்ணும் உணவிற்கு
உரமாக ஆகுறான்,,

தில்லுமுள்ளு செய்பவனோ
பல்லகாட்டி சிரிக்கிறான்,,
திமிராக நெஞ்சுயர்த்தி
தெனாவட்டாய் நடக்கிறான்,,

அவனுக்கோ வணக்கமிட்டு
அடிமையாக கிடக்கிறோம்,,
அவனளிக்கும் ஐந்துக்கும்பத்துக்கும்
அடையாளத்தை தொலைக்கிறோம்,,

உணரத்தான் கூடாதோ
உழவனின் துயரத்தை,,
உதறத்தான் கூடாது
உழவென்னும் மகத்துவத்தை,,

சட்டைகள் அணிந்திடா
சாமியய்யா உழவனும்,,
தொட்டல்ல வணங்கனும்
தெய்வத்தின் பாதத்தையும்,,

கோடிகள் இரைத்தாலும்
கேப்பையோ விளையாது,,
கோவணத்தின் கரமின்றி
பசியென்றும் தீராது,,

அறிந்தேநீ தொழுகனும்
அவன்பாதம் விழுகனும்,,
அன்னையென காப்பவனை
அரவணைத்து பழகனும்,,

உழவனொருவனே உயர்குடியாகனும்!.

ப.அருண்

அந்தாதித் தொடை வெண்பா!

வேல்வந்து தாக்குதடி! வெல்விழி மின்மாதே!
தேள்வந்து தாக்குதடி! தேனூற்றே! - சேல்வந்து
துள்ளுதடி! என்னுயிரைக் கொல்லுதடி! கண்கருவி
விள்ளுதடி கொஞ்சிட வே!

பாட்டரசர் கி. பாரதிதாசன்

வெறுப்பு

“அம்மா என்னோட ஒரு ஷூவைக் காணோம்” பள்ளிக்குக் கிளம்பிய மகள் சகானாவின் கூக்குரல் தீயணைப்பு வண்டியின் அபாயச் சங்கொலியைப் போலக் கூடத்தை அடைந்தது. மகளை பள்ளிக்கு அனுப்பிட்டு நான் வேலைக்குக் கிளம்பதான் நேரம் சரியா இருக்கும். துவண்டு போயிருந்த தோசையை வயிற்றில் திணித்துக்கொண்டே “அங்கதான் இருக்கும் பாரு” பதிலாய் என் குரல் வழிந்தது. ‘எல்லாத்துக்கும் உடனே அம்மாதான். கொஞ்சமும் குனிஞ்சு நிமிந்து பாக்குறதில்லை.’

“பாத்துட்டேன்... இல்லம்மா...!” கணமும் தாமதிக்காத பதில் அசட்டையாய்ப் பிறந்தது.

‘இல்லாம எங்கப் போயிடும்? நாலாவது படிக்கிற பிள்ளை... தானா எதுவும் செய்யுறதில்லை...’ மகளின்மீது எழுந்த கோபம் என்னோடு வீட்டுக்கு வெளியே நகர்ந்தது. சகானாவின் ஒற்றைக் காலணி என்னிடமும் கண்ணாமூச்சுக் காட்டியது.

‘ம்... எங்கப் போயிருக்கும்?’ கணவரது வேண்டாத காலணிகள்தான் அலமாரியை அடைத்துக்கொண்டிருந்தன. அவற்றைத் தூக்கிப் போட்டுட்டாலும், தன்னுடைய சொத்தையே அழிச்ச மாதிரி துடிச்சுடுவார். பள்ளிக்கும், வேலைக்கும் நேரமாகிறது எனக் கைக்கடிகாரம் சொல்ல எரிச்சல் அநியாயத்திற்கு மண்டியது.

“சரி.. சரி... நீ வேற ஷூவைப் போட்டுக்கிட்டுப் போ.”

“சொன்னேனே கேட்டீங்களா?” தன் பக்க நியாயத்தை விளம்பிவிட்டு எங்களது

ம.மணிமாலா

வீட்டுக்கு எதிரிலேயே இருக்கும் 'ரூலாங்' தொடக்கப்பள்ளிக்கு மகள் விரைந்தாள்.

காலணியைத் தேடியதில் சில நிமிடங்கள் தொலைந்திருக்க, மனது ஆறிய தோசையை நிராகரித்தது. கம்பெனி வண்டியை விட்டுவிடக்கூடாதே என்ற தவிப்பும் சேர்ந்துகொள்ளக் கால்களை எட்டி வைத்தேன். 'லேக்சைட் எம்ஆர்டி'க்கு அருகில்தான் கம்பெனியின் வண்டி வந்து நிற்கும். என்னதான் வீட்டுக்குப் பக்கத்திலேயே வண்டி வந்து அழைச்சாலும் ஒவ்வொரு நாளும் ஓட்டமாயில்ல கிளம்ப வேண்டியிருக்கு! ஏழு இருபதுக்கு கம்பெனி வண்டியை எடுத்தால் எட்டுக்கெல்லாம் 'துவாசில்' இருக்கும் பணியிடத்துக்குப் போயிடலாம். அதை விட்டுட்டா காலை நேரம் உக்கிரமா ஆகிடும்! டாக்சிகள் அனைத்தும் செந்தூரத்தை இட்டுக்கொண்டதைப்போலச் சிவப்பு விளக்குகளோடு போக, பஸ்ஸைப் பிடிச்சாலும் வேலைக்கு லேட்டாகிடும். 'இன்னும் சில ஆண்டுகள்ல துவாசுக்கு 'எம்ஆர்டி' வந்துடும். அப்பதான் இந்தப் பிரச்சினையும் ஓரளவுக்குத் தீரும்' என்று மனத்திற்கு ஆசைகாட்டி புறப்பட்டேன்.

"என்னோட ஷூ கிடைச்சுதாம்மா?" பள்ளி முடிந்து வந்த சகானா கேள்வியை எழுப்பினாள்.

"காணோம்... நீதான் எப்பவும்போல அங்கொண்ணும் இங்கொண்ணுமா விட்டிருப்பே. யாராவது அப்படியே எத்திட்டுப் போயிருக்கலாம்" சொல்லிக்கொண்டே குழம்பைத் தாளித்தேன்.

அவள் என்னைப் பார்த்த பார்வையில் கிலோ கணக்கில் கண்டனம் நிறைந்திருந்தது. 'என்னவோ பொறுப்பின் சிகரம் மாதிரி பார்வை!'

வழக்கம்போல எதைப்பற்றியும் யோசிக்கக் கூட அவகாசமின்றி நாட்கள் விரைந்தன.

"கமலி என்னோட ஒரு ஷூவைக் காணோம்" வேலைக்குக் கிளம்பிய கணவரின் குரல் அமிலத்தைப்போல என் செவிகளில் நுழைந்தது.

"நீங்க என்ன சின்னப் பிள்ளையா? அங்கே இல்லைன்னா அலமாரியைத் திறந்து பாருங்க. அதைவிட்டுட்டு..." என்றவள் மகளுக்கு இரண்டாவது பின்னலைப் போட்டுக்கொண்டிருந்தேன்.

"பாக்காம இருப்பேனா... இங்கப் பாரு... ஒண்ணே ஒண்ணுதான் இருக்கு...!"

"நீங்க வெளியே கண்டபடி போட்டுட்டு வந்தீங்களா?"

"நான் என்ன சின்னப்பிள்ளையா? நேத்து வேலை முடிஞ்சு வந்தப்ப 'ஷூ ரேக்' உள்ளே எடுத்து வச்சிட்டுதான் வந்தேன். இந்த ஒத்த ஷூகூட அங்கேதான இருந்திச்சு!" என்றவரே அலமாரியின் அடுக்குகளில் மீண்டும் அலசினார்.

"இதேமாதிரிதான் அன்னைக்கு என்னோட ஒரு ஷூவையும் காணோம்பா. அதுக்கும் அம்மா என்னைத்தான் திட்டினாங்க!" கிடைத்த சமயத்தை சகானா சரிவரப் பயன்படுத்திக்கொண்டாள்.

"அப்படியா? ஒத்த ஷூ மட்டும் எப்படிக் காணாமப் போகும்?" ஆச்சரியம் கணவரது கண்களில் படிந்தது.

என் சிந்தனை தொற்றுநோயைப்போல அதிவேகமாக அக்கம்பக்கத்தார் மீது பரவி, இரண்டு வீடுகள் தள்ளியிருக்கும் ஹமீது மீது வந்து நிலைத்தது. உயர்நிலை ஒன்றோ இரண்டிலோ படிக்கிறான். ஆனாலும் அவனது பாவனைகள் அனைத்திலும் கைதேர்ந்த உதாசீனம் நிறைஞ்சிருக்கும். மின்தூக்கிக்கு மிக அருகில் யார் வந்தபோதும் எனக்கென்ன என்பதைப்போல மூடுவான். அதுமட்டுமல்லாமல் கீழே இருக்கும் பொருள் எதுவாயினும் அவனுக்கு காற்பந்துதான். அவன் எத்திய பந்து எங்க வீட்டுச்செடியைப் பதம் பார்த்தும் மரியாதைக்குக்கூட மன்னிப்பு என்ற சொல்லைக் கூறாமல்

சென்றது இதுநாள்வரை என் மனத்தில் ஆணியாய்க் குத்திக்கொண்டிருக்கிறது. என் நெருங்கிய சிநேகிதி வாங்கித் தந்த அரிய வகை ரோஜாச்செடியை அதன் பிறகு காப்பாற்ற முடியவில்லை. எனது எண்ணத் தூரிகையைக்கொண்டு அவனைக் குற்றவாளி என்று சுவரோவியமாக்க, அனைத்தும் பிசகின்றி கனகச்சிதமாய்ப் பொருந்தியது.

என்னளவில் உறுதிப் படுத்தப்பட்ட சந்தேகத்தை என்னவரது காதுகளில் போட, "வீணா அடுத்தவங்க மேல பழியைப் போடாதே" என்னை நிமிர்ந்துகூடப் பார்க்காமல் நகர்ந்தார்.

"அப்போ ஒத்த ஷூவுக்கு மட்டும் கால் முளைச்சா காணாமப் போகுது?"

விடையறியாக் கேள்வியைக் கன்றிய முகத்துடன் நான் தொடுக்க, பதில் பேச மனமற்று வேறு ஷூவை நுழைத்துக்கொண்டு கிளம்பினார். அவரது புறக்கணிப்பும் சேர, அன்றைக்கும் எனது சில நிமிடங்கள் காணாமற் போனதுதான் நான் கண்ட பலன்! திடீர் வெள்ளத்தால் நாலாபுறமும் சிதறியோடும் நதியைப்போல மனம் குற்றவாளியை இனங்காண முடியாது தவித்தது.

அடுத்தடுத்துவந்தநாட்களில்என்னுடைய காலணியில் ஒன்றும் காணாமல் போனது. அது கொஞ் சநாளுக்கு முன்னே என்னோடு இணைந்த கால்வலி பிரச்சினைக்காக இந்தியாவிலிருந்து என்னுடைய அக்கா வாங்கி அனுப்பிய செருப்பு. வலி இடம் மாறி மனத்தைத் தாக்க, தயவு தாட்சண்யம் பாராது காலணி அலமாரி கூடத்தை அடைந்தது. அப்படியிருந்தும் ஒருநாள் உள்ளே எடுத்து வைக்க மறந்துவிட்ட சகானாவின் காலணியில் ஒன்றும் மாயமானது!

சேர்ந்திருக்கும் ஒற்றைக் காலணிகளைத் தூக்கிப் போடவும் மனமில்லை. அவற்றின் இணை எங்காவது கிடக்காதா என்ற

விடியலைத் தேடி

நேரிசை ஆசிரியப்பா

கற்றவை நிழலே, காண்பவை கனவே,
உற்றவ ரிலையே, ஊழ்வினைப் பயனே,
என்சொல லுனக்குள் என்வழி கொணரும்?
இன்புறப் பணமேன்? இன்முகம் இருக்க..
வெள்ளொளி வருங்கால் வெற்றிடம் நிரம்பும்
உள்ளொளி பிறந்தா லுன்புகழ் பரவும்.
நல்வழி நடந்தால் நானிலம் வணங்கும்
அல்லலைத் துடைத்தே யாற்றுக வுனையே..
கண்களில் விடியல் காண்பாய்
உண்மையை யுணர்வி லூற்றுக மனமே..!

- ஜெனிஅசோக்

நப்பாசையில் வெளியே போகும்போதும் வரும்போதும் தேடியலைந்து கண்கள் சோர்ந்தன. ஒற்றைக் காலணிகளை எந்த நம்பிக்கையில் இன்னும் வைத்திருக்கிறேன்? இது வேற அவ்வப்போது என்னைப் பாத்து பழிக்கிற மாதிரியிருக்கே என்று தோன்ற, மனமின்றியே அவற்றைக் குப்பைத் தொட்டியில் வீசினேன். வேண்டுமென்றே இந்த விஷமத்தனத்தைச் செய்பவர் யாராக இருக்கும்? உடல் அலுவலகத்தில் இருந்தாலும் மனம் அந்தக் கருப்பு ஆட்டைத் தேடியலைந்தது.

“ம்... ஒருவேளை அந்தப் பையன்தான் இந்த வேலையைச் செய்யுறானோ?” கணவரது முகத்தில் சந்தேகப் புள்ளிகள் தென்பட்டன. அவரது பொறுமையையும் சோதிக்க ஒருவன் இருக்கிறானே!

“வீணா அடுத்தவங்க மேல பழியைப் போடாதீங்க.”

‘யாரோ போடும் ஆட்டத்திற்கு இவரிடம் மல்லுக்கு நின்னு ஆகப் போவதென்ன?’ மனம் நியாயத்தின் பக்கம் நின்று வினா தொடுத்தது. இந்தச் சம்பவங்களுக்குப் பிறகு ஹமீதின் அலட்சியப் பார்வையும், செயலும் என்னைக் கூடுதலாக வெறுப்பேற்றி பார்த்தன. ‘இவனைல்லாம் பெத்ததோட கடமை முடிஞ்சதுன்னு கையைக் கழுவிட்டாங்களோ?’ மனம் சம்மந்தமே இல்லாமல் அவன் பெற்றோரையும் சேர்த்து நிந்தித்தது. ‘பேசாம நம்ம சந்தேகத்தை அவனிடமே கேட்டுடலாமா? ம்... கேட்டு ஏதாவது ரசாபாசமா ஆகிட்டால்? நம்மிடம் ஆதாரம் என்ன இருக்கிறது? மனத்தில் குழப்பம் அலையலையாய் மிதந்தது.

ஒருநாள் மின்தூக்கியில் வரும்போது “எப்படின்னே தெரியலங்க... எங்க வீட்ல ஒரு செருப்பு மட்டும் அடிக்கடிக் காணாமப் போகுது” என்றார் ஹமீதின் அம்மா.

அந்த வார்த்தைகள் தந்த தாக்கத்தில் என் மன ஓவியம் கடிதில் கலைந்தது. நினைவென்னும் பாசியில் காலை நிறுத்த முடியாது நான் வழுக்கிச் செல்ல, என் கணவர் கற்பனையில் என்னைக் கண்டு எள்ளி நகையாடினார். இருந்தும் மிக அவசரமாகச் சுதாரித்தேன்.

“உங்க வீட்டிலுமா?”

அதுவரை பளீரென்று இருந்த மனத்தில் கிரகணம் பிடித்ததைப்போலச் சூனியம் கவிந்தது. இந்த வீட்டிற்கு வந்து ஏறக்குறைய மூன்றாண்டுகளாகியும் லேசா கசியும் புன்னகையுடன் ஒரு வணக்கம், அதை மிஞ்சிப்போனால் விழாக்களுக்கான வாழ்த்துகளுடன் முடித்துக்கொள்ளும் பழக்கம் அன்று உடைந்தது. காரிடாரில் நின்றுகொண்டேகாணாமல்போகும்ஒற்றைக் காலணிகளைப்பற்றிக் கால் கடுக்குமளவுக்கு அளவளாவினோம். நசிந்திருந்த மனத்திற்கு அது சற்று ஆறுதலாகவும் இருந்தது.

கப்பும் கிளையுமாய் மதாளித்து வளர்ந்த கோபத்தில், ‘சக மனிதர்களைப்பற்றி எவ்வளவு சீக்கிரம் தப்பான அபிப்பிராயம் கொண்டுவிட்டாய்?’ என உள்ளம் சாடியது! தொட்டியை உடைத்ததற்கு அவன் வருத்தம் தெரிவித்திருந்திருக்கலாம்! கசந்திருந்த மனம் ஹமீதிடம் மானசீகமாக மன்னிப்பை வேண்டியது. சந்தேக வட்டத்திலிருந்து அவன் அவசரமாக நீக்கப்பட்டான். நீரைப்போல வடிவமற்று நினைவுகள் தாறுமாறாக ஓட அந்த வட்டத்தில் யாரைப் பொருத்தலாம் என மனசு கிடந்து தவித்தது.

பக்கத்து வீட்டிலுள்ள சீன கணவன், மனைவி உறங்குவதற்காக மட்டுமே கூட்டை நாடி வரும் பறவைகள். அதற்கடுத்ததாக உள்ள வயதான மலாய் தம்பதிகள், தடுமாறாது அவங்கக் கால்ல செருப்பை நுழைக்கவே சிரமப்படுபவர்கள். இன்னொரு வீட்டில் குடியிருக்கும் வெளிநாட்டு ஊழியர்களோ அதிகாலையில், குதிரைப் பந்தயத்தைப்போலக் கிளம்பி இரவில் நொண்டிக் குதிரையைப்போல வீட்டுக்குத் திரும்பி வருபவர்கள். அந்தத் தளத்தில் இருப்பவர்களை ஞாபகங்களின் எல்லையில் கொண்டு வந்து நிறுத்திப்

பார்த்தும் முகங்கள் ஒட்டாது சென்றன. ஐயத்தின் வீரியத் துளிகள் அந்தக் கட்டடம் முழுக்கப் பரவின!

'நாமதான் பிரச்சினையிலிருந்து தற்காத்துக் கொண்டோமே அப்புறம் ஏன் வீணான சிந்தனை?' என்று அறிவு கேள்வியெழுப்பும்போது உள்ளம் அடங்கும். கொஞ்ச நேரத்திலேயே 'ஒரு செருப்பை மட்டும் யார் எடுத்துக்கிட்டுப் போவாங்க?' எனச் சிலிர்த்துக்கொண்டு அது தலையெடுக்கும்.

அடுத்து வந்த இரண்டு மூன்று வாரங்கள் சிங்கப்பூருக்கே உரிய, நேரமே போகலைங்கிற பேச்சுக்கே இடமில்லாது உதயமாகி உதிர்ந்தன!

"அம்மா ரேச்சல் வீட்டிலும் நம்ம வீட்டைப்போலவே ஒரு ஷூ மட்டும் தொலைஞ்சு போகுதாம்!"

'இரண்டு 'புளோக்' தள்ளியிருக்கும் ரேச்சல் வீட்டிலுமா? கொஞ்ச காலமாகக் களவின்றிப் போனதால சற்றே தணிந்திருந்த மனது, சகானா சொன்னதைக் கேட்டு உறுத்தத் தொடங்கியது.

சிங்கப்பூரில் ஒரு திருட்டுச் சம்பவம் என்பதே அதிசயம். இதில் ஒற்றைச் செருப்பு மட்டும் களவாடப்படுகிறதென்றால்...? மனத்தைக் குலுக்கி நினைவைச் சலித்துப் பார்த்தாலும் குற்றவாளியாரென அறிவுக்கு எட்டலையேங்கிற எரிச்சல் அதிகரித்தது. ஹமீதை சம்பவங்களுக்குக் காரணமாய் நினைத்தபோது இருந்த நிம்மதியும் இழந்து குற்றவாளியைத் தேடியலைந்த மனம் சோர்வுற்றது. எங்காவது ஜோடியாக இருக்கும் செருப்பைப் பார்த்தாலே ஏதோ நிறைவாய்த் தோன்றியது.

பக்கத்து வீட்டு சீன இளைஞன் தன்னுடைய ஒற்றைக் காலணிகள் காணாமற் போவதைப்பற்றி ஒருநாள் என்னவரிடம் சொன்னான். திருட்டுச் செய்திகள் பழகிய மனத்திற்கு, யாராவது செருப்புக் காணாமப் போகலைன்னு

வறுக்கை அந்தாதி

கட்டிய மல்லிகையில்
ஆடிக்கொண்டிருக்கிறது
விற்பவர் குடும்பம்

●

குடும்ப உறவு
குறைந்து கொண்டே உள்ளது
அன்பும் பாசமும்

●

பாசம் விலையாகிறது
ஏற்க முடியவில்லை
காதல் திருமணம்

●

மணக்கும் மலரில்
மறைந்து போனது
உழைப்பின் வியர்வை

●

வியர்க்காத வேலை
கேட்காமலேயே தந்தது
குறைந்த ஆயுள்

●

ஆயுள் முழுக்க
நிம்மதியே இல்லாமல் போனது
அடுத்தவர் முன்னேற்றம்

●

ஏற்றம் தந்தாலும்
நகராது நின்று கொண்டிருக்கும்
ஏணிமரம்

●

மரங்களின் அழிவு
அதிகமாகிப் போகிறது
பூமிச் சூடு

●

சூடாறிப் போகிறது
பேசப்படும் விவாதம்
முடியவே இல்லை

●

இல்லாத மழைநீரை
பெறுவதற்கு காத்திருக்கிறது
அணைக்கட்டு

●

இராம வேல்முருகன்
வலங்கைமான்

சொன்னால்தான் அது ஆச்சரியமாய்த் தெரிந்தது. இதற்கெல்லாம் காரணகர்த்தா எட்டிப்பிடிக்க முடியாதளவில் சென்று கொண்டிருந்தான். இழப்பின் மீதான வலி மறைந்து அந்தக் குற்றவாளியின்மேல் வன்மத்தின் அளவு உயர்ந்துகொண்டே போனது.

"இதைக்கண்டுபிடிச்சேஆகணும்.நாம்ஒரு 'சிசிடிவி' கேமராவை வெளியில் வைப்போம். யாரிடமும் இதைப்பற்றி மூச்சுவிடாதே" என்றார் கணவர். சகித்துக்கொள்ள முடியாமையின் விளிம்புநிலையில் இருந்தார். அது, இப்போதுள்ள மாதிரி திரும்பும் இடமெல்லாம் துப்பறியும் விழிகள் இல்லாத காலம்.

கணவரது கூற்று சமயசஞ்சீவியைப் போல எனக்குத் தோன்றியது. எவ்வளவு நாட்கள்தான் எச்சரிக்கையாக இருக்க முடியும்? முக்கியமா யார் அந்த ஆளென கண்டுபிடிக்கப் போறோம் என்ற நினைவே என்னை லேசாக்கியது.

நாங்கள் நினைத்த மாதிரிக் கண் காணிப்புக் கருவியை வீட்டுக்கு வெளியே வைப்பது அவ்வளவு இலகுவானக் காரியமாக இல்லை. எதார்த்தம் தள்ளி நின்று எங்களை முறைத்தது. விதிமுறைகள் நிறைந்த சிங்கப்பூரில் ஏன், எதற்கு என்ற கேள்விகளுக்குச் சளைக்காது பதிலளிக்க வேண்டியிருந்தது. வீடமைப்பு வாரியத்திடம் அதற்கான ஆவணங்களைச் சமர்ப்பித்து, காத்திருந்து ஒருவழியாக நினைத்ததைச் சாதித்தோம். வேண்டாத காலணியொன்று வேண்டுமென்றே வீட்டுக்கு வெளியே விடப்பட்டது. குற்றவாளியைக்கழுமரமேற்ற ஆர்வத்துடன் காத்திருந்தோம்!

தினமும் சகானா உறங்கியபிறகு, கண்காணிப்பு கேமராவில் பதிவாகியுள்ளதைப் பார்ப்பதும் ஒரு கடமையாய் ஆனது. சில நாட்கள் கணினியில், சிங்கையில் தேடலின்றி வளரும் பூனைகளின் நடமாட்டம் மட்டுமே தலைகாட்டின. கொழுகொழுவென்றிருந்த பூனைகள் ஹமீதின் வீட்டுப் பக்கமாகப் போவதும், அவங்க வீட்டுச் செல்வங்கள் அவைகளுடன் செல்வதுமாக இருந்தன. அதைப் பார்க்கையில் கணவரது முகத்தைக் காணச் சகிக்கவில்லை. பறவை சிக்காத கண்ணியைப்போல நாங்கள் போட்டு வைத்தக் காலணி பரிதாபமாய்க் கிடந்தது. ஆரம்பத்திலிருந்த ஆர்வம் போகப் போக நீர்த்துப்போகத் தொடங்க, அந்த வருத்தத்தைப் பொறுக்க முடியாது எரிச்சலும் பொங்கியது. அந்த முகமறியாதவன் எங்களைப் பார்த்து கைகொட்டிச் சிரிப்பதைப்போலத் தோன்ற அன்னியோன்யமான வீடே எனக்கு அசாதாரணமாய்த் தெரிந்தது.

ஒருநாள், மின்தூக்கியிலிருந்து நள்ளிரவின் நிசப்தத்தைச் சற்றே விலக்கியவாறு சக்கரவண்டியை உருட்டிக் கொண்டு ஒருவர் வந்தார். நேரத்தை நாடி கணினியில் என் கண்கள் போயின. இரண்டு மணி! பாரபட்சமின்றி தூக்கம் மக்களை விழுங்கியிருந்த சமயம். இந்த நேரத்தில் இந்தப் பகுதியில் இவருக்கு என்ன வேலை? அடுப்புக்கரியை மைய கடைந்ததைப்போன்ற இருளில் அந்நபரது முகம் சரியாகத் தெரியவில்லை. பக்கத்துவீட்டில் நின்ற சக்கர வண்டியிலிருந்த அந்தக் கருப்பு அசைவைக் கண்டு மனத்தில் சந்தேகம் பிறக்க, என் இதயத்திலிருந்து பொறுக்க முடியாத துடிப்பு எழுந்தது.

சின்ன டார்ச்சை அடித்துப் பக்கத்து வீட்டு ஷூரேக்கில்உருவம்தேடியது.'அட...ஒற்றைக் காலுடன் இருக்கும் இவர் சக்கரவண்டியில வந்து கீழேயுள்ள சாப்பாட்டுக் கடையில் பொழுதெல்லாம் உட்கார்ந்திருப்பவராச்சே! அந்த மனுஷனா இப்படி?' ஆர்வத்தின் நுனியில் நின்றுகொண்டிருந்தவளின் காலை யாரோ இழுத்து விட்டதைப்போலானேன். கணினியை விட்டுவிட்டு அதிர்வோடு எங்களது பார்வை சந்தித்துக்கொள்ள ஏதோ ஒன்று எங்களது பேச்சை உறிஞ்சியிருந்தது. எங்க வீட்டுக்கு வெளியே கிடந்த செருப்பில் ஒன்றை எடுத்துக்கொண்டு சக்கரவண்டியை உருட்டியபடி அவர் போக, வீரியமிழந்த மனத்தோடு கணினியைப் பார்த்துக்கொண்டிருந்தோம்! ■

இதுக்குமா நல்ல நாள்?

மைதிலி சம்பத்
திருமல்கிரி, செகந்திராபாத்

"என்னம்மா சொல்றீங்க? இன்னும் இரண்டு நாளா? வேண்டாம்மா"

"இல்லே டாக்டர்! நான் காரியமாத்தான் இதைச் சொல்றேன்" என்றாள் ஜயா.

"இதோ பாருங்கம்மா! இப்பவே உங்கப்பா இறந்த மாதிரிதான். எதோ மெஷின் தயவால சுவாசம் ஓடிக்கிட்டுருக்கு. வயசான ஜீவன். கஷ்டப்படுத்த வேண்டாம்மா. நான் சொல்றதைக் கேளுங்க"

"டாக்டர், என்னோட இரண்டு அக்காக்களும் வரணும். இப்ப அவர் கதையை முடிச்சிட்டா, அப்பா மூச்சு இருக்கறபோது எங்களைப் பார்க்க விடல்லையேனு சண்டை போடுவாங்க"

"சரி, சரி! அதிகபட்சம் நாளை ஒரு நாள் வெச்சுக்கலாம்" என்று சொல்லிவிட்டு புறப்பட்டார் டாக்டர்.

வெளியே வழியில் ஜயாவின் கணவன் பவன் டாக்டரைப் பார்த்தான் "ஏதாவது முன்னேற்றம் உண்டா, டாக்டர்?" என்று கேட்டான்.

"அதையெல்லாம் எதிர்பார்க்கவே முடியாது. இன்னிக்கே வென்ட்டிலேட்டரை எடுத்துடலாம்ன்னேன். உங்க மனைவியின் அக்காக்கள் வரணும்னாங்க. அதுக்குத்தான் ஒரு நாள் போகட்டும்னு பேசாமே இருக்கேன்." என்றார் டாக்டர்.

"மனைவியின் அக்காக்களா? அவளுக்குக் கூடப் பிறந்தவர்களே கிடையாதே? நீங்க என்ன சொல்றீங்க, டாக்டர் ?" என்றான் பவன். வந்த எரிச்சலில் இருவருமே திரும்ப ஐ.சி.யு விற்குப் போனார்கள்.

"டாக்டர்கிட்டே என்ன சொன்னே? உனக்கேது அக்கா? நீ பொய்கூட சொல்லுவியா?" என்று கேள்விகளை அடுக்கினான் பவன்.

"சாரிங்க! டாக்டர் சார், நீங்களும் என்னை மன்னிச்சுடுங்க. உண்மையான காரணத்தைச் சொன்னா வென்ட்டிலேட்டரை இரண்டு நாள் வைக்க ஒத்துக்க மாட்டீங்களோன்னுதான் பொய் சொன்னேன்." என்றாள் ஜயா.

"அதென்ன உண்மைக் காரணம்?"

"எங்கப்பாவுக்கு உத்திராயணம் பிறந்த அப்பறம்தான் இறக்கணும், அப்பத்தான் தான் நல்ல கதிக்குப் போவோம் ங்கறது அசைக்க முடியாத நம்பிக்கை. அதைப் போய் கெடுப்பானேன்? அதுவும் அவருடைய கடைசி ஆசை" என்றாள் ஜயா. " நீங்க கேட்டதில்லையா? மஹாபாரதத்திலே உத்திராயண புண்ணிய காலம் பிறந்த பிறகுதான் உயிரைவிடணும்னு பீஷ்மர் அம்புப் படுக்கைல படுத்துகிட்டு இருந்தபோது கூட உத்திராயணத்திற்காக காத்துகிட்டுஇருந்ததை? எங்கப்பா ரொம்பவும் புராணம், ஸாஸ்திரம் எல்லாம் படிச்சவர். அதில மிகுந்த நம்பிக்கையுள்ளவர். அதனால் தான் அவரை அவர் ஆசைப்பட்டபடி அனுப்பலாமே என்ற எண்ணம். அது தவறானா மன்னிச்சுடுங்க"

திகைத்து வாய் பேசாமல் இருந்த டாக்டரிடமும், பவனிடமும் தன் விவாதத்தைத் தொடர்ந்தாள். "டாக்டர், நீங்க எத்தனை பெண்களுக்கு சிசேரியன் பண்ணும்போது, அவங்க வேண்டி கேட்டுகிட்டா கொஞ்சம் முன்னாடியோ, பின்னாடியோ நல்ல நட்சத்திரத்தில பிறக்க வைக்கிறீங்க? அதுபோல இதுவும் ஒரு கோரிக்கை. அவ்வளவுதான்" என்றாள்.

டாக்டர் மௌனமாக தலையாட்டிவிட்டு அங்கிருந்து நகர்ந்தார். ■

தன்முனைக் கவிதைகள்

தாய்நாட்டை பிரிந்த
அகதிபோல் ஆனேன்
உன்னைப் பிரிந்து
வாடும் நான்

- தட்சணா மூர்த்தி

கொடுத்துச் சிவந்த
கரங்களைக் காண்கிறேன்!
குங்கும வியாபாரி
என்றால் அப்படித்தான்!

- க.பன்னீர் செல்வம்

ஆயிரக் கணக்கானோரை
எழுப்ப வேண்டும்
மரணத்திற்கெதிரான மருந்து
யார் கையில் இருக்கும்?

- முனைவர் ம.ரமேஷ்

தொடரி கிளம்பி நேரமாயிற்று.
சன்னலில் எட்டிப் பார்க்கிறேன்.
இன்னும் துரத்தியவாறே...
உன் நினைவுகள்.

- புகழேந்தி

எனக்குள்
நீ.
ஒளிந்து விளையாடமுடியாமல்
நான்.

- காவனூர். சீனிவாசன்.

மரம் குறித்து
கவிதை ஒன்று
எழுதுகிறேன் குறிப்பேட்டில்
படபடக்கிறது தாள்.

- சக்திஅருளானந்தம்

நமக்குத் தெரியவில்லை
அதற்குத் தெரிந்திருக்கிறது
எங்கோ துளிர்விடுகிறது
பச்சை மூங்கில்.

- வெற்றிப்பேரொளி

காயங்களும் கண்ணீரும்
சொந்தமாகிப் போன வாழ்வில்
விரக்தியிடமிருந்து
விலகித்தான் நிற்கிறேன்...

- ஆத்தூர் சாகுல்

பேருந்துப் பயணத்தில்
ஊசி விற்ற சிறுவன்
தைத்துக்கொண்டே வருகின்றான்
என் பயணம் முழுதும்.

- ஆ.நடராஜன்

வயலை உழுகின்ற உழவன்
அரை நிர்வாணமாய்
வரப்பில் நின்ற பொம்மை
அழகான ஆடையுடன்..!

- அனுராஜ்

வாசனை இல்லா
வண்ண வண்ணப் பூக்கள்
பறிக்க முடியாதபடி
அவள் சேலையெங்கும்.

- தமிழ்.

நடந்த தூரத்தை
அளவிட முடியவில்லை
சுற்றும் பூமியை
நிறுத்திட இயலாது.

- வா.சண்முகம்



தொகுப்பாளர் : கவிச்சுடர் கா.ந.கல்யாணசுந்தரம்

உலக நாடுகளைச்
சுற்றிப் பார்க்கும் சிறுவர்கள்.
கீழே விழுந்து உடைகிறது
பொம்மை விமானம் .

-ஆ.நடராஜன்

நிமிர முடியாதவனுக்குத்
தாள்களே தலைகள் !
நிமிர்ந்தே நடப்பவனுக்குத்
தலைகளே தாள்கள் !

- கவிக்கோ துரைவசந்தராசன்

உயிர் இல்லையென்றாலும்
உயிர்பயம் காட்டுகிறது
அத்துமீறும் பறவைகளுக்கு
சோளக்காட்டு பொம்மை..

- தென்பரை இராக பாஸ்கர்

வண்ணங்களில் சிறந்தது
கறுப்புதான் என்கிறேன்...
காரணம் கேட்கிறீர்கள்
கண் இல்லை எனக்கு.

- செல்வா ஆறுமுகம்

நீ எப்பாத்திரத்தில்
ஊற்றுகிறாயோ..
அப்பாத்திரத்தில்
நிறையும் நீராவேன்..

- சாரதா க. சந்தோஷ்

பாடு பொருள் என்னிடம்
ஏதும் இல்லையென
நினைத்துக் கொள்ளாதே ...
உனது கொலுசொலிகள் உள்ளனவே !

- கா.ந.கல்யாணசுந்தரம்

உச்சாணிக்கொம்பில்
என்னை ஏற்றி விட்டு
உற்சாகத்தில் பலர்
தன்னந்தனிமையில் நான்..

- லஷ்மி கார்த்திகேயன்

ஒரு தெரு கூட
இத்தனை கிளர்ச்சி தருமா
எதிர்பார்க்கவில்லை
நீ வசிப்பதால்.

- பான்ஸ்லே

நீ ஓர் அலகு
நான் ஓர் அலகு
இருவரும் இணையின்
அதுவே பேரழகு !

- நளினி தேவி

வாழ்க்கையை ஒரு
கேள்விக்குறியோடுஅணுகுகிறேன்
அதுவும் கேள்விக்குறியோடு
என்னை தினம் பார்க்கிறது

- சரஸ்வதி ராசேந்திரன்

நிதர்சனம் இதுவென்ற
புரிதலின்
உணர்தலால்
இயல்பு வசப்படுகிறது!

- அன்புச்செல்வி சுப்புராஜு

பனிக்குடம் உடைந்து ஓடுகிறது
தடைகளை மீறி
அந்த ஆறடி பள்ளத்தை நோக்கி
மனித வாழ்க்கை.

- த.அதியமான்

தன்முனைக் கவிதைகள்

உனக்குள் புதிதாக
வெட்கம் முளைத்து
துவங்கப் பட்டது
என்னை வீழ்த்தும் யுத்தமொன்று.

- தமிழ் அரசன்

எப்பொழுதும் மிஞ்சம்
வைக்கிறார் அப்பா
குழந்தைகள் உறங்கியதும்
பசியாறினாள் அம்மா.

- கேசவன் புருஷோத்தமன்

கையசைத்து அவள்
பேசத் தொடங்கினாள்
விழி அசைக்காமல்
சிலையாகி போனேன்

- ஷர்ஜிலா யாகூப்

காண்போரிடமெல்லாம்
கவனமாக கைகொடுக்கிறான்
அந்த ஒற்றைக்கல் மோதிரம்
காதலியின் அடையாளம்...

- ஐ.தர்மசிங்

தூக்கத்திற்கு நான்
பாய் விரிக்கிறேன்
ஏக்கம் எங்கிருந்தோ வந்து
சுருட்டிப் போடுகிறது

- கண்ணன் புலமி

எதையோ இழந்ததாக எண்ணி
வருந்திக் கொண்டிருந்தேன்.
இறுதியில்தான் தெரிந்தது நான்
இழந்தது என்னைத்தான் என்று.

- மா. ஷங்கர்

ரோஜாவை நினைப்பவர்கள்
முள்ளுக்கும் சேர்த்தே தான்
நீரிரைக்க வேண்டும் மனமே
மனித வாழ்வும் அப்படியே.

- ஜென்சி செல்வராஜ்

மறப்பதற்கு மனதை
திசை திருப்பிப் பார்க்கிறேன்
வார்த்தைகளின் வடிவமாக
அங்கும் வந்து வதைக்கிறாய்

- மருதா சமத்

ஒவ்வொரு சொல்லாக
உதிர்த்துக் கொண்டிருக்கிறாய்
நான் கவிதைகளாகக்
கோத்துக் கொண்டிருக்கிறேன்

- மதுரா

நாட்டின் குடிநீர் பஞ்சம்
அமைச்சரவையில் விவாதம்
அயல்நாட்டு பானங்களை
ருசித்தபடி...

- வெ. கலிவரதன்

ஆழ உழுது விதைத்தேன்
உன் நினைவு களை
மறுநாள்,,,,, நீ தான்
எங்கோ முளைத்து விட்டாயே

- பாவலர் வீரவாணன்

மிதிபட்ட புல் தலைநிமிர்கிறது
மீண்டும் வளர,
மனிதனுக்குப் பாடமிது-
கற்றுக்கொள்வானா...!

- செண்பக ஜெகதீசன்

சொர்க்கத்தைக் கண்டேன் !



தேனூறும் இதழோரம் முத்தாடினேன்
தீராத மோகத்தில் பித்தாகினேன்
தானாடும் மயிலோடு நானாடினேன் - தன்
நிலவோடு இரவெல்லாம் உறவாடினேன் !

மலராடும் மஞ்சத்தில் விளையாடினேன்
மதுவுண்டு மாதோடு ஒன்றாகினேன்
பண்போடு குயிலோடு பண்பாடினேன் - பன்
நீரூற்றில் நாளெல்லாம் நீராடினேன் !

மொழியாகி விழியாகி வழியாகினேன்
முதலாகி இடையாகி முடிவாகினேன்
பூவாகி காயாகி கனியாகினேன் - பூங்
குழல்மாது போலாகி பணிவாகினேன் !

இருக்கின்ற சொர்க்கத்தில் இவையாகினேன்
இனிக்கின்ற பிறவிக்கும் சுவையாகினேன்
பிறக்கின்ற பண்பாட்டில் இசையாகினேன் - பேர்
ஆனந்தத் தன்மைக்கு மிசையாகினேன் !

தமிழ்நெஞ்சம் அமின்

பல்சுவை
தமிழ்நெஞ்சம்
www.tamilnenjam.com
ஜூலை 2019

இவள் எவ்வினம் ?

மின்னலின் இடையினம்
கன்னலின் சுவையினம்
பின்னலின் சடையினம்
உண்ணலின் தெவிட்டினம்
ஓயாத உழைப்பினம்
ஒவ்வாத சலிப்பினம்
பேதையின் மறுப்பினம்
கோதையின் சிறப்பினம்
கொவ்வையின் இதழினம்
தாய்மையின் முதலினம்
தாரத்தின் தயையினம்
இத்தனையும் நாங்கள்
இருந்துமென்ன
இன்னும் ஏமாளிகள்..
பெண்களெனும் பேரினம்....

கவிஞர்
பொற்பனைசுப்பிரமணியன்